SWATHANTRA...   Regd. No. M.

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

18712

சிலமை மூட்டை தூக்கிகள்
(படம்)

'ஆப்ஸெண்ட்' ஆசாமிகள்

பூமியின் ஆட்டம்
(கஸ்தூரி ரங்கய்யா B.A.L.T.)

கற்பனையூர் வழக்குகள்
(திப்பு)

ஈசுவர லீலை
(என். பிச்சமூர்த்தி)

நியாய உணர்ச்சி
(வால்டேர் ஞானி)

பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை
(ஈ. கிருஷ்ணய்யர்)

சிறியதோர் காட்சி, பெரியதோர் பாடம்
(டாக்டர் சாஸ்திரி)

நட்சத்திரக் குழந்தைகள்
(பீ. எஸ். ராமையா)

புத்தகம் 4.   தைமீ 13உ   (26-1-34) வெள்ளி   இதழ் 9.

"நந்தன் சரித்திரம் ஆனந்தம்"

("திலீபன்" எழுதியது)

சுரையோ படர்ந்திருக்கும்; சுற்றிலும் ாய்கள் குலைத்திருக்கும்; பருந்தோடி ட்டமிடும்; நண்டோ குடியிருக்கும்; சிறு நத்தைகமடம் வலுத்திருக்கும். இன்னும் வர்ணிக்கவேண்டுமோ? "தோலூறுங்கேணிகளில் வெகு தொல்லைப்படும் வாடை சொல்லிமுடியாது." இத்தனை வைபவங்களுக் கிடையிலே, நந்தன்—அந்தப் பரம பக்தன்—அறு நூறு ஆண்டுகளுக்கு முன்னே ஆதனூரில் அவதரித்தான்.

நந்தனைப் பெற்ற சேரி, இன்னும்—ஆறு நூற்றாண்டுகள் கழிந்தும்—அதே ஸ்திதியில்தான் இருக்கிறது. ஆயினும், "நந்தன் சரித்திரம் ஆனந்தம்." அதை நாடகத்தில் பார்த்து மகிழ்கிறோம்; மனது உருகி உருகி வழிந்து விடுகிறோம். கதா காலட்சேபங்களில் கேட்டுக்கேட்டு அக மகிழ்கிறோம். ஆனால் அந்தச் சேரியின் பக்கம் போக மாட்டோம்! அங்கே இன்னும் எத்தனை 'நந்தன்கள்' உண்மையில் தோன்றித் தோன்றி, வெளிவராமலே, வர முடியாமலே, தவித்து மறைந்தனரோ! எவ்வாறாயினும், "நந்தன் சரித்திரம் ஆனந்தம்"தான். அதை மாத்திரம் நம்மில் நெகிழ்ந்த உள்ளம் படைத்த எவரும் மறுக்கமாட்டோம்.

சின்னஞ் சிறு பருவத்திலே, மண்ணை யெடுத்து, சிவபெருமானைப் போல் உருவம் பிடிப்பான் அந்தப் பக்தன். தன்னை மறந்து குதித்தாடிப் பாடி அதை வணங்குவதுதான் அவன் விளையாட்டு. வயது வந்து, வேதியனுக்கு அடிமையா யிருந்த காலத்து, அந்தப் பக்தி தழைத்தோங்கி வளர்ந்து விட்டது. திவ்ய ஸ்தலங்களுக்குச் சென்று ஈசுவர தரிசனம் செய்ய லானான். திருப்புன்குருகூரில் நந்தி வழிமறைத்துப் படுத் திருந்ததாம். நந்தன் அப்போது உருக்கத்துடன் செய்த பிரார்த்தனையைக் கோபால கிருஷ்ண பாரதி வர்ணித்திருக்கிற பாடலைப் படிக்கும்பொழுது, உண்மையில் கல் நந்தியும் விலகித்தா னிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. "வழி மறைத்திருக்குதே! மலை போலே ஒரு மாடு படுத்திருக்குதே!" நந்தன் பரம பக்தன் ஆதலால், அவனது குழந்தையுள்ளம் இவ்வாறுதான் கெஞ்சியிருக்கும்; வேறெவ்வித மிருக்க முடியும்?

புண்ய யாத்திரை முடிந்து ஊர் திரும்பி வந்ததும், பக்தி வெறி நந்தனுக்கு மிகுந்துவிட்டது. உழவையும் பயிரையும் தொழிலையும் தான் மறந்ததல்லாமல், சேரியிலுள்ள மற்றவரையும் குடியையும் புலாலையும் விட்டுப் பரிசுத்தமடைந்து, ஈசனைத் தொழ அழைக்கிறான். "பார்ப்பாரத் தெய்வமது பலிக்காது பறையருக்கு" என்பது மற்றவர் எண்ணம். "பார்ப்பார் பறையரென்று பாராது பரிதிபோல் காப்பாற்று மல்லவோ சண்ணுதல்" என்பது நந்தன் கட்சி. சேரியின் பெரிய கிழவனையும் நந்தன் தன் வயம் செய்துவிட்டான். "நாளைச் சிதம்பரம் போவேன்" என்று நந்தன் ஓயாது கோஷிக்கக் கேட்டு, "ஆண்டை பொல்லாதவன், அண்ணே" என்று மற்றவர் பயமுறுத்தினர். "ஆண்டைக் கடிமைக்கார னல்லவே நான்—மூன்று லோகமும் படைத்தளித்திடும் ஆண்டவர்க் கடிமைக்காரன்" என்று தருக்கி நிமிர்ந்து உரைக்கின்றான் நந்தன்.

ஆண்டைக்கும் நந்தனுக்கும் நடக்கும் வாக்குவாதம் உள்ளத்தை உருக்குவதாகும். ஆண்டை வேதியனும் என்னென்னவோ சொல்லிப் பார்க்கிறான். நந்தன் துளிக்கூட மசியவில்லை. ஒரே உறுதி; சிதம்பரமே ஞாபகம். "உத்தாரம்" வேண்டுமென்றே திரும்பத் திரும்பக் கெஞ்சுகிறான். நந்தனை வேதியன் பலவாறு கஷ்டப்படுத்தி, அநேக வேலைகளையும் இடுகின்றான்.

"தான் வேதியனுக்கு அடிமையல்ல; ஆண்டவனுக்கே அடிமை" என்ற திட நிச்சயம் ஏற்பட்டவனாயிருந்தும், வேதியனின் விடையின்றிச் செல்ல, அவனுக்கு விருப்பமில்லை. வேதியனிட்ட வேலைகளெல்லாம், ஈசனே துணைபுரிந்தாற்போல், அதி சீக்கிரம் பூர்த்தியாகின்றன. நந்தன் மகிமையையும், அவனது தீவிர பக்தியையும் இறுதியில் வேதியனும் உணரலானான். "சாதியில் இழிகுலஞ் சாஸ்திரம் கிடையாது" என்ற முடிவுக்கு வருகின்றான்; "நந்தா நீ சிவபக்தன்—உன்னை நம்பாமலே மோசம் போனேன் நான் பித்தன்" என்று மனங்குழைந்து, நந்தனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவனுக்குச் சிதம்பரம் செல்ல விடை தருகின்றான்.

போகும் வழியெல்லாம் ஒரே எண்ணம், ஒரே இலட்சியம், ஒரே பக்தி! தில்லை எல்லையிலோ கண்டாமணிச் சத்தம் கேட்கிறது; அதிலே ஒரு குதூகலம். நகருள் நுழைந்ததும், "இது தானோ தில்லைத்தலம்" என்ற வியப்புடன், பரவசத் தாண்டவ மாடுகின்றான் நந்தன். தில்லையுட் புகுந்தும் சில தொல்லைகள் ஒழியவில்லை. பக்திக்கு முன்னே, உள்ள ஒழுக்கத்துக்கு எதிரே, பாழும் சாத்திரங்கள், உணர்ச்சி குலைந்த மனிதர் கையிற் சிக்கி உயிரற்ற எழுத்துக்கள் என்ன செய்யமாட்டும்? தில்லைவா ழந்தணரும், இறுதியில் நந்தனுடைய பரம பக்திக்கு முன்னே பணியவேண்டிய தாயிற்று. நடராஜப்பிரானையும் நந்தன் எத்தடையுமின்றித் தரிசனம் செய்து மகிழ்ந்தான். இந்த "நந்தன் சரித்திரம் ஆனந்த"மே அல்லவா?

இந்த உருக்கமான சரித்திரத்தை அப்படியே அனுபவித்துப் பல கீர்த்தனைகளாகப் பாடியிருக்கிறார் கோபால கிருஷ்ணபாரதி. அவற்றின் முழு அர்த்த புஷ்டியும் விளங்கும்படி இசைத்து, இந்தக் காலத்தில் கதா காலக்ஷேபம் செய்வதில் சிறந்த ஒரே பெண்மணி, காயனபடு ஸ்ரீமதி ஸரஸ்வதி பாய்தான் என்பது ரஸிகர்கள் கருத்து. ஹரிஜன சேவையில் ஈடுபட்டுப் புனித யாத்திரை செய்துவரும் மகாத்மா காந்திஜீயின் முன்னிலையில் இந்தச் சரித்திரத்தை இவ்வம்மை சென்னையில் சமீபத்தில் காலட்சேபம் செய்ய முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

சுதந்திரச்சங்கு

“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே”

போன் நெ. 8088 | ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] தை மீ 13உ வெள்ளிக்கிழமை (26—1—1934) [No. 9

சீமை மூட்டை தூக்கிகள்

தேசத்ரோகமான காரியத்தைச் செய்யும்போது கைதான் கூசாதா? மனது தான் நடுங்காதா? ஜப்பானிலிருந்து இத்தனை மூட்டை துணி வரலாமென்றும், லங்காஷயரிலிருந்து இத்தனை பேல் ஆடை வரலாமென்றும், ஒப்பந்தமாமே! இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட இந்தியமுதலாளிகளுக்கு மூளை எங்கே போயிருந்தது? அவர்கள் செய்யப் புகுந்தது தேசத்ரோக காரியமென்பதை அவர்களுடைய நெஞ்சு குறிப்பிடா திருந்திருக்குமா? ஜப்பானிலிருந்தும் சீமையிலிருந்தும் பகட்டான, மலிவான துணிகளை வரவழைத்துத் தான் இந்தத் தேசத்து மக்களின் மானத்தை மூடமுடியு மென்பது, கையெழுத்திட்ட அந்த மகா புருஷர்களின் எண்ணம் போலும்!

பம்பாய் முதலாளிகளில் சிலர் சில்லறைச் சவுகர்யங்களுக்கு ஆசைப்பட்டுத் தேசநலத்தை விற்றுவரும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். தேசத்தில் சுதேசியம் வளரவேண்டு மென்பதற்காகத் தொண்டர்கள் மகாதியாகம் செய்த காலத்து அத்தனையையும் காசாக்கிக் கொள்ள முயன்றது இந்த முதலாளி வர்க்கம். ஒழிந்து போகட்டும்; காசு தாய் நாட்டில் தானே யிருக்கிறது என்று தேசபக்தர்கள் சும்மா யிருந்தனர். இப்போது இதே முதலாளிகள் அந்நிய வியாபாரத்தை அபிவிர்த்தி செய்வதற்கான பணியாட்களாக மாறி விடுவார்களானால், இவர்களைத் தேசம் எதிர்க்காது என் செய்யும்?

‘ஜப்பான் இந்தியப் பஞ்சை விலைக்கு வாங்குவதாக வாக்களித் திருக்கிறதே!’ என்று சிலர் சொல்லலாம். மஞ்சூரியாவில் போட்டுள்ள பருத்தி விதைகள் முளைக்கின்ற மட்டும் இந்தியப் பஞ்சைப்பற்றி ஜப்பான்காரன் லட்சியம் செய்யானென்பதை இந்தப் பிரகஸ்பதிகள் அறிந்துகொள்ளவேண்டும். ‘இங்கிலாந்து நமக்குப் புதிதான அரசியல் திட்டத்தைத் தரப்போகிறதே; அதற்கு மாற்றாக நாம் லங்காஷயர்த் துணியை வாங்குவோமே” என்று சிலர் சொல்லிப் பசப்புகின்றார்கள். ஐயோ! புதிய அரசியல் திட்டமும் வேண்டாம்; மூட்டை மூட்டையாகச் சாமான் வந்து இறங்கவும் வேண்டாம் என்றுதான் தேசபக்தன் சொல்லுவான்.

குறிப்பிட்ட பம்பாய் முதலாளிகளுக்கு இப்போதே எச்சரிக்கை செய்து விடுகிறோம். தேசத்தின் சார்பாக கண்ட கண்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கு நீங்கள் யார்? ஏன் இப்படித் தேசத்துக்கு அவமானமும் நஷ்டமும் ஏற்படும்படியான காரியங்களுக்கு உதவி புரிகிறீர்கள்? சீமைத் துணி மூட்டையையும் ஜப்பான் துணி மூட்டையையும் கப்பலிலிருந்து இறக்குவது கவுரவமான தொழிலென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா என்ன? போதும் உங்கள் ஒப்பந்தங்கள்! போதும் உங்கள் தேசத்துரோகங்கள்! இன்னமும் இக்காரியங்களைத் தொடர்ந்து நடத்துவீர்களானால் தேசமென்ற பெரு நெருப்பை அறியாது அதனோடு விளையாடுகின்றீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்!



—Courtesy :—“பம்பாய் 'சென்டினல்.”

சட சக்தியின் சேஷ்டை

பாழாம் வெளியும் பதறிப்போய் மெய்குலையச் சலனம்
பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய—அங்கே
ஊழாம் பேய்தான்; "ஓஹோ ஹோ" வென்றலைய—வெறித்
துறுமித் திரிவாய், செறுவெங் கூத்தே புரிவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை.

சத்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங்கொட்டி—அங்கே
எத்திக்கினிலும் நின்விழியனல் போயொட்டித் தானே
எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. (பாரதியாரின் 'ஊழிக்கூத்து')

அம்மம்மா! கேட்கக் கேட்க மனது நடுங்குகின்றதே! வடக்கே நமது சகோதர வர்க்கம், நமது பாரத புத்திரர்கள் படும் அவஸ்தைகளைக் கேட்கக் கேட்க, அய்யோடி! எவ்வளவு கஷ்டம்! எத்தனை நஷ்டம்! சகோதர ஹிருதயம் உருகாதிருக்குமா?

ஜீவன்களுக்குத்தானா 'சக்தி' இருக்கின்றது; சடப் பொருள்களுக்குச் 'சக்தி' இல்லையா? சந்தேகம் தெரிய வேண்டுமானால்,மனுஷா,பார் வடக்கே! ஜீவசக்தியை நிர்மூலமாக்கி விட்டது சட சக்தி. பாய்போலப் படுத்திருந்த பூமி கிடுகிடென்று தொட்டில்போல ஆடிற்றும். ஐந்தே நொடிப்பொழுது தான். ஆனால் அதற்குள் கட்டிடங்கள் சடசடவெனச் சரிந்தன. மனிதன் கைத்திறங்கள் மண்ணோடு மண்ணாயின. திமுதிமென மரங்கள் விழுந்தன. தடாரென்று பூமிவெடித்தது. பிலத்திலிருந்து பாதாள கங்கை எழுந்தாள். பெருகினாள். கிராமங் கிராமமாகப் பாய்ந்து வெள்ளக்காடாக்கினாள். நிலைகுலைந்து அலறிக்கொண்டு தெருவில் ஜனங்கள் ஓடினார்கள். குடல் குலைந்து வீழ்ந்து எங்கு நோக்கினும் பிணக்காடாயிற்று. ஸனாதனிகள், ஹரிஜனங்கள், பிராமணர், அல்லாதார், வெள்ளையன், கறுப்பன் எல்லாரும் பிணங்கள்! கூற்றுவனுக்கு முன்னே, இயற்கையின் முன்னே, ஜாதிச் செருக்கும் நிறச்செருக்கும் என்ன செய்ய முடியும்? தேடுவாரற்று ஆயிரக்கணக்கான பிணங்கள் தெருக்களில் கிடந்தனவாம்; இதென்ன ஊழிக்கூற்று? பிரளயகாலமா? அன்னையின் கோர தாண்டவமா? ருத்ர நடனமா? பாட்னாவுக்கருகே திடீரென்று கங்காநதி மண்ணில் மறைகின்றது.ஓஹோஹோ! இதைக் காட்டிலும் விஷம விந்தை வேறுண்டோ? குபீலென்று லட்சக்கணக்கான ஊற்றுக் கண்களை விட்டு நீர் மீண்டும் பாய்கின்றது. சட சக்தியைப் பேய்போல அவிழ்த்து விட்டுவிட்டால், அதன் சேஷ்டையின் முன்னே மனிதன் எம்மாற்றம்!

'ப்ரகிருதிம் ஸ்வாமவஷ்டப்ய
விஸ்ரு ஜாமி புன: புன:
பூதகிராம மிமம் கிருத்ஸ்ன
மவசம் பிருகிருதேர்வசாத்'

அதாவது

"இயற்கையை அடக்கி யாள்பவன் நான். உயிர்களைப் படைத்தனுப்பி அவை இயற்கையின் ஆதிக்கத்துக்கு அடங்கி நடக்குமாறு செய்துள்ளேன்" என்றான் கண்ணன் கீதையில். அதை யுணர்ந்து ஸர்வ சக்திக்கு முன்னே நாம் தலைகுனிந்து வணங்கிப் போவோம். நடப்பது நடக்கட்டும். ஹே ருத்ர சக்தியே! உனது லீலை போதாதா! பாரதநாடு எல்லாத் துறைகளிலும் கஷ்டப்படுவதோடு இயற்கையின் கொடுமையும் சேரவேண்டுமா? நமஸ்தே! மனித கர்வம், பங்கமாய் விட்டது. ஸர்வ சக்தியே! உன் லீலையை அடக்கிக்கொள்.

சாவுக்கு அஞ்சாத வேதாந்திகளும் வீரர்களும் வாழ்ந்த நிலம் ஆர்யாவர்த்தம். மரணத்திற்கு இம்மியும் பயப்படாமல் காலத்திற்கேற்ற கர்மங்களையும் கடமைகளையும் ஆற்றி வந்தனர் பாரதமக்கள். ஆனால் கால சக்கிரம் சுழன்றது. பாரத நாட்டினர் கோழைகளாயினர். பொருள் தேடித் தேடி நாளைக்கென்று புதைத்து வைப்பதிலேயே கண்ணுங்கருத்து மாயினர். கடமைகளை மறந்தனர். வேதாந்த ஞானத்தைக் காற்றில் விட்டனர். பற்றுக்கள் அதிகமாகவே சாவினிடம் அச்சம் ஏற்பட்டது. வீரச்செயல்களை நினைக்கவும் அஞ்சினர். இந்தப் புண்ய பூமியில் பிறந்தவர்கட்கு இத்தகைய கோழைத்தனம் ஏற்படலாமா? இது தகுமா? பாரதபுத்திரா, வடக்கே பார்! சாவு எவ்வளவு மலிவா யிருக்கிறது, எவ்வளவு இனமாகத் திணிக்கப்படுகிறது பார்த்தாயா? இவ்வளவுதான் வாழ்வெல்லாம். ஆசையோடு கட்டி வைத்த வீட்டையும், அன்போடு முத்தமிட்ட மனைவியையும் எல்லாவற்றையும் நொடிப் பொழுதில் இழந்து தவிக்கின்றனர் பல்லோர். இவ்வளவுதான வாழ்வு. சாவென்னும் திரை இந்த நாடகமேடையில் எப்போது விழுந்தாலும் விழலாகும். ஆகவே, நமது மூதாதையர் கூறியபடி சாவென்னும் பயத்தை உதறு! உலகில் இருக்கும் வரை இங்குள்ள கஷ்டப்படும் சகோதரர்கட்கும், தாய்நாட்டுக்கும் தொண்டு செய்வதுதான் நமது லட்சியமாயிருக்கவேண்டும். போக வாழ்வை மறந்து தியாக நெறியில் புகுவதுதான் சரியான வாழ்வு. அத்தகைய வாழ்வுடைய உதாரண புருஷர்களும் நம்மிடை யில்லாமற் போகவில்லை.

ஐந்து நாள் முன்னதாகத்தான் நோயினால் உடல் நலம் குறைந்துள்ள பாபு ராஜேந்திரப்பிரசாத் சிறையினின்று வெளிவந்தார். உடனே பூகம்பத்தினால் நமது சகோதரர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களைக் கேட்டுத் திடுக்கிட்டார். உடனே கஷ்ட நிவாரண வேலையில் அப்பெரியார் இறங்கிவிட்டார். பிறருக்கென வாழ்வதே பெருஞ் செல்வமென நினைக்கும் பெரியார்களைத் தயாரித்துத் தந்துள்ள காந்தீயத்தின் பெருமைக்கு ராஜேந்திரபாபு ஓர் உதாரணம்! அவர் எடுத்துக்கொண்டுள்ள கஷ்ட நிவாரண வேலைக்கு உதவ நாமனைவரும் முற்பட வேண்டும். இளைஞர் விளக்கு பண்டித ஜவஹர்லாலும் பண்டித மாளவியாவும் இந்தக் கஷ்ட நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

வைஸ்ராய் வில்லிங்டனும் கஷ்ட நிவாரணத்திற்கென ஓர் நிதி திரட்டி வருவது குறிப்பிடத்தக்கது. கஷ்டத்தினால் கண்ணீர் வடிப்பவர்களின் கண் துடைத்து ஒரு கவள அன்னமும், ஒரு துணிக் கந்தையும் கொடுப்பவன் தான் ஜீவன் முக்தன். அந்தகைய ஜீவன் முக்தர்கள் தமிழ் நாட்டில் உண்டா? கஷ்ட நிவாரண வேலைக்கு உதவுவார்களா?

'ஆப்ஸெண்டு' ஆசாமிகள்

சோம்பேரித்தனம் உலகில் சிலருக்குத்தான் குத்தகை. டெல்லிச் சட்டசபை அங்கத்தினர்களில் சிலருக்குச் சோம்பேரித்தனம் ஊறிப்போய்க் கிடக்கிறது. அவர்கள் சட்டசபைகளில் 'ஆஜர்' கொடுப்பதுகூட இல்லை. அவர்கள் உட்காருவதற்காகப் போடப்பட்டுள்ள ஆஸனங்கள் பல மாதங்கள் காலியாய்க் கிடக்கின்றன. கிராமத்திலோ வெளிநாட்டிலோ தூங்குவதற்காகவும் அலைவதற்காகவுமா அவர்களைப் பொதுஜனங்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்தார்கள்? இந்தச் சோம்பேரித்தனம் வரவர அதிகமாய்ப் போகவே, ஸர்தார் சாந்தசிங் என்ற ஓர் அங்கத்தினர், "வெகு காலமாக 'ஆப்ஸெண்டாக' இருக்கும் அங்கத்தினர்களை ரத்து செய்து விடவேண்டும்" என்று ஓர் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார். அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதால் சர்க்காருக்கு ஏதும் நஷ்டம் கிடையாது. ஆனால் துரைத்தனமோ பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழனாக இருக்க விரும்புகிறது. ஒரு சர்க்கார் அங்கத்தினர், "வராதவர்களுக்காகத் துரைத்தனம் ஏன் கவலைப்படவேண்டும்?" என்று கேட்கின்றாராம். "பொதுஜனங்களுக்காகத் துரைத்தனம் ஏன் கவலைப்படவேண்டும்?" என்று அவருக்கு யாராவது இன்னொரு கேள்வியைப் போட்டால் நன்றாயிருக்கும். ஆப்ஸண்டு ஆஸாமிகளின் அங்கத்தினர் பதவியை ரத்துசெய்வதுதான் சரி. அதுமட்டுமல்ல; இப்போதுள்ள சட்டசபையை முற்றிலுமே ரத்துசெய்து விட்டாலும் பொதுஜனங்கள் கவலைப்படமாட்டார்கள். ஏனெனில் இப்போது சில அங்கத்தினர்கள் கிராமங்களில் தூங்குகிறார்கள்; சிலர் சபையிலேயே தூங்குகிறார்கள். இப்பேர்ப்பட்ட சபையால் தேசத்துக்கு என்ன பலன்?

வேலையில்லாப் "பட்டாளம்"

எந்த இண்டு இடுக்கில் வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள்; ஊருக்கு ஊர், சின்னஞ் சிறு கிராமத்தில் கூட, அததன் சக்தியானுசாரம் ஏதோ பத்து, இருபது, நூறு, இருநூறு பி. ஏ.,க்களும், அதற்கு மேற்பட்ட 'மெட்ரிக்கு'களும், "நான் கற்றதும் கேட்டதும் அவலமாய்ப் போனதந்தோ!" என்று வேதாந்தம் பாடிக் கொண்டிருப்பதைக் காண்பது நிச்சயம். பாரமார்த்திக வெள்ளம் அவர்கள் மீது பெருக்கெடுத்தோடிவிட்டது என்று எண்ணிவிட வேண்டியதில்லை. வேலை கிடைக்காததால் விளைந்த விந்தை விளைச்சல் இது. நமது யூனிவர்ஸிடிகள், வருஷத்துக்கு வருஷம் எவ்வளவு பட்டதாரிகளை உற்பத்தி செய்து வருகிறது, அவர்களுள் எவ்வளவு பேர் சும்மாயிருந்துகொண்டிருக்கிறார்கள் என்ற கீழ்க்கண்ட புள்ளி விவரங்களை, ஒரு எம். ஏ., பி. எல்., "சுயராஜ்யா"வில் தந்திருக்கிறார்; கவனியுங்கள்.

1930-ம் வருஷத்திய உற்பத்தி.

பி. ஏ.க்கள்	...	9,300
மெட்ரிக்குகள்	...	25,716
எப். ஏ.க்கள்	....	13,633
எம். ஏ.க்கள்	....	1,426
மொத்தம் ஏறக்குறைய		50,000

ஆகிறது. ஆனால், அதே சமயத்தில் வேலை கிடைக்காத பி. ஏ., எம். ஏ.க்களின் தொகைமட்டில் 15 ஆயிரமாம். ஆதாவது, விளைச்சல் இரண்டு கலம், சோடை மூன்று கலம் என்பதுபோலிருக்கிறது இந்தக் கணக்கு. நல்ல படிப்பையா, இது!

சாஸ்திரி தர்சனம்

"இப்படி யாராவது நினைத்திருப்பார்களோ 1930-ம் வருஷத்தில்! அற்புத தேவ விக்ரகமொன்றல்லவா தோன்றப்போகிறதென்று நினைத்திருந்தோம்; புன்னகைசெய் முகத்துடன், மங்கள மூர்த்தியாக அது விளங்குமென்றல்லவா எண்ணியிருந்தோம். ஆனால், அதற்கு நேர் மாறாய் ஓர் பயங்கர அரக்க ரூபமன்றோ முளைத்து விட்டது; ஐயோ! இது பல்லை யிளித்துக் கோரமாய் நிற்கிறதே!" என்று அலறுகிறார் மகா கனம் சாஸ்திரியார். கனவில் ஏதோ உளறிக் கொட்டியதைப் பத்திரிகையில் போடலாமோ என்று எண்ணுகிறீர்கள் அல்லவா? அதுதானில்லை. நனவில் பேசிய நிதான வார்த்தைகள் தான். கூடுதலில்லை; குறைவில்லை. அப்படியே அவர் ஆங்கில வார்த்தைகளின் மொழி பெயர்ப்பு. எதைப்பற்றிச் சொன்னாரென்று நினைக்கிறீர்கள்? ஹோர் செய்த வட்டமேஜை யாக குண்டத்தில் தோன்றிய வெள்ளை யறிக்கையைப் பற்றித்தான். ஆனால், நாளைக்கு இந்தக் கோர அரக்கன் உயிர் பெற்று நடமாடி நம் தேசத்துக்குக் குடியேற வரும் பொழுது, நம் சாஸ்திரியின் இனத்தார் "நீயே எங்கள் தெய்வம்" என்று அதனிடம் சரணாகதி யடையாம லிருப்பார்களா? தவறிக்கூட அப்படிப்பட்ட அபிப்பிராயத்தை எந்த மிதவாதியும் இதுவரையில் சொல்லக் காணோமே.

ராமசாமி தர்சனம்

ஆனால் மிஸ்டர் ராமசாமி முதலியார் என்று இந்தச் சென்னையில் ஒருவர் இருக்கிறாரே, அவர் பரம யோக்கியர். வெள்ளையறிக்கைத் திட்டத்தை ஆதரித்தே தீரவேண்டுமென்று கொஞ்சம் கூடச் சங்கோசமின்றி அவர் கூறி விட்டார். சாஸ்திரியார் வருணித்தபடி அந்த அரக்க சிருஷ்டியை ராமசாமி முதலியார் கட்டிக்கொண்டு வாழட்டும். ஆனால் தேசத்தின் அபிப்பிராயமோ வேறு என்பதை அவர் இன்னும் அறிந்து கொள்ளா திருப்பாரானால், அவரை ஈசன்தான் திருத்த வேண்டும். தேசத்தின் அபிப்பிராயத்தை மனத்தால் அறிந்திருக்கும் அவர் இப்படி பேசினால் அவரை ஈசன்தானே காக்க வேண்டும்!

தொத்து நோய்

மகாத்மாஜியின் விஜயத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர் பங்கெடுத்துக் கொள்ளலாகாது என்று சென்னை சர்க்கார் ஓர் உத்திரவு போட்டார்கள் அல்லவா? இந்தத் தொத்து நோய் மத்திய மாகாணத் துரைத்தனத்தையும் பிடித்துக் கொண்டது. அங்கும் ஓர் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. சட்டசபை வீரர்கள் இதைக் கண்டித்துப் பேசியும் அந்தத் துரைத்தனம் அசைய மறுத்து விட்டது. மகாத்மாஜியின் விஜயத்துக்கு 'ராஜீய வர்ணம்' கொடுக்க யார் முயலுகின்றார்கள் என்பதை இதனின்று பொதுஜனங்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

மகிழ்ச்சிக்குரியது

ஐயன் காந்தி திருவனந்தபுரத்திற்கு விஜயம் செய்த அதே சமயத்தில், அந்த தர்பார் ஒரு மகிழ்ச்சிக்குரிய உத்தரவைப் போட்டிருக்கிறது. "சாலையிலே விலகிப்போ" என்று சொல்லும் தீண்டல் ஒழிந்து தொலைய வேண்டும் என்று அந்த சர்க்கார் ஒப்புக் கொள்ளுகிறது. பொதுப் பணத்தைக் கொண்டு நிர்வகிக்கும் கிணறு, ரஸ்தா, அன்ன சத்திரம முதலியவற்றில் எல்லாம் ஹரிஜனங்களும் பிரவேசிக்க உரிமையுண்டு என்று அந்தச் சர்க்கார் கட்டளை பிறப்பித்து விட்டது. ஆனால், ஆலயப் பிரவேசத்தைப் பற்றி, எவ்வித நடவடிக்கையும் இல்லாதது பற்றி நம் அதிருப்தியைக் குறிப்பிடா திருக்க இயலவில்லை.

சிட்டகாங் பிரகஸ்பதி

சிட்டகாங் நகரின் மாஜிஸ்திரேட் அல்ப சொல்பப் பேர்வழியல்ல. ஒரு வாரத்திற்குப் பத்ரலோக் ஜாதி இளைஞர்கள் தங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே கிளம்பக் கூடாதென்று ஓர் உத்தரவு போட்டுவிட்டார். அதாவது அவரவர் செலவிலேயே அவரவர் வீடுகளைச் சிறையாக ஆக்கி விட்டார் அவர். அடுத்த உத்திரவு என்னபோடுவாரோ? சூரியன் பதினைந்து நாளைக்குப் புறப்படலாகாது, சந்திரன் ஒரு மாதத்திற்குத் தலைக் காட்டக் கூடாது, 100 வருஷத்துக்குப் பூமி இனி ஆடக்கூடாது என்று அவர் உத்தரவுகள் போட்டாலும் போடக்கூடும். சூரிய, சந்திரர்களை அடக்கியாண்ட அதிகாரிகள் ஆதிகாலத்தில் இருந்ததுபோல இப்பவும் இருக்கலாமல்லவா?

தபாலாபீஸ் தராசு

அநேக ஊர்களில் தபாலாபீசுகளில் உள்ள தராசுகள் தப்பு நிறையையே காட்டிக்கொண்டிருக்கின்றன. அவனவனுக்கு ஓரணுவோ இரண்டணுவோதான் நஷ்டமாவதால் அதிகமாக எவரும் அதைப்பற்றிக் கவலைப் படுவதில்லை. ஆனால் பெரும்பாலும் நஷ்டப் பொதுஜனங்களின் பக்கம்தான் ஏற்படுவதாக வதந்தி. இங்கிலாந்தில் இப்போது எல்லாத் தபாலாபீஸ் தராசுகளையும் சோதிப்பதென்று தீர்மானித்திருக்கிறார்களாம். இந்தியத் தபால் இலாகா என்ன செய்யப்போகிறது?

திருடினாலும் முடியாது

"நான் புகையிலையைத் திருடிச் சுருட்டுச்செய்து விற்கிறேன்; அப்படியிருந்தும் தம்படிக்கு ஒண்ணுக்குக் குறைந்த விலைக்கு விற்றால் கட்டவில்லை. நீ எப்படியப்பா தம்பிடிக்கு 8 விற்கிறாய்" என்றான் ராமன். "ஓ! நான் சுருட்டையே திருடி விற்கிறேன்" என்றானாம் கிருஷ்ணன். ஜப்பான் போட்டியைப்பற்றி, இதேமாதிரி சொல்லுகிறார் ஒரு பிரஞ்சு வியாபாரி. "நான் நூலையெல்லாம் திருடிப் பட்டு நெய்து விற்றால்கூட, ஜப்பான் பட்டோடு விலையில் போட்டிபோட முடியாது, ஐயா" என்கிறார் அவர். ஐரோப்பாவில் சில ஜப்பான் சாமான் எப்படி இறைகின்றன, பாருங்கள்!

	ரூ.	அ.	பை.
எலக்டிரிக் பல்பு	0	1	0
கால் மேஜோடு	0	3	6
பைஸிக்கிள்	12	0	0
1000 கைக்கடிகாரம்	25	0	0

இவை மாத்திரமா? ஜப்பானியர், காப்பி ஸப்ளை, துணி சப்ளை சகலமும் மிக மலிவாகச் செய்கிறார்களாம். இதையெல்லாம் பார்க்கையில், ஜப்பானியர் சாமான்களை விளைவிக்கிறார்களா அல்லது சாமான்கள் ஆகாயத்திலிருந்து மழையாய்ச் சொரிகின்றனவா என்று ஆச்சரியப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆனால் உண்மை என்ன? ஜப்பான் சர்க்கார் ஜப்பான் தொழில்களுக்குச் சகலவிதமான உதவிகளையும் செய்துவருவதுதான் இந்த விலை மலிவின் இரகசியமாகும்.

குழந்தையா, பொம்மையா?

"நாலுகால், எட்டு முகம், பாரு, சாமீ, பாரு" என்று தெரு மூலையில் ஒருவன் கூக்குரல் போடுகிறான். "காலில்லாக் குழந்தை, ஐயா! கையில்லா முடவன், தாயே" என்று, சில பரிவாரங்களுடன், ஒரு பிச்சைக்காரன் நம் வீடுகளை வலம் வருகிறான். இதற்காக, பல குழந்தைகளைப் பலவிதமாய்ச் சில பிச்சைக்காரர்கள் ஹிம்சித்து, காலையும் கையையும்கூட ஒடித்துவிடுவதாக, கேள்விப் பட்டிருக்கிறோம். குழந்தைகளின் ரூபத்தைக் குலைத்து நம்முன் கொணர்ந்து நிறுத்தினால், நிச்சயம் பிச்சை கிடைக்கும் என்று அவர்கள் கருதியிருக்கிறார்கள். இதற்கு ஜன சமூகம் இடங்கொடுக்கலாமா? தச்சன் கை மரப்பாச்சியா குழந்தை? இந்தக் கொடுமைகளை அறவே ஒழித்துவிட, ஜப்பான் துரைத்தனம் ஒரு சட்டம் செய்யப்போகிறது. "கால் கையில்லாக் குழந்தைகளைக் காட்சிச் சாலையில் வைத்தலாகாது; பிச்சைக்கு அழைத்துச் செல்லக்கூடாது; இப்படிச் செய்வோர் யாராயினும் அவருக்குத் தண்டனை விதிக்கப்படும். 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பெற்றோர் நன்றாய் வளர்க்காவிட்டாலும், அநாதரவு செய்தாலும், சர்க்கார் எடுத்து 21 வயதுவரை வளர்க்கவேண்டும்" என்பதுதான் இந்தச் சட்டம். ஒழுக்கமும் வலிமையும் அற்ற குழந்தைகள், நெல் வயலில் முளைத்த களைகளைப் போன்றவை; சமூகத்தையே அவ்வை நாசம் செய்துவிடும். இதர துரைத்தனங்களைப் பார்த்தாவது, நமது சர்க்கார் இத்தகைய நல்ல காரியங்களைச் செய்ய, எப்பொழுதுதான் முயற்சியெடுக்கப் போகிறதோ?

விலைவாசி விழுந்த வேகம்

விளை பொருள்களின் விலை வாசிகள் எல்லா நாடுகளையும் விட அதிகமாக இந்தியாவில் விழுந்து போயிருக்கின்றன. அதற்குக் காரணம் ரூபாயின் மதிப்பு அனாவசியமாக வீங்கியிருப்பதுதான் என்று நளின ரஞ்சன சர்க்கார் காட்டியிருக்கின்றார்.

	1930-ல் ஒரு சாமானின் சராசரி விலை.	1933-ல் அதே சாமானின் சராசரி விலை.	ஆகவே விலை குறைவு.
ஆஸ்திரேலியா	147	129	11%
கானடா	135	105	22%
ஆர்ஜெண்டைன்	122	112	8%
நியூஜிலண்ட்	143	130	16%
இந்தியா	116	87	25%

ஆகவே இந்திய ரூபாயை இங்கிலாந்தின் ஸ்டர்லிங்கோடு முடிச்சுப் போட்டு வைத்திருப்பது மகா அநியாயம். டெல்லிச் சபையோ இந்த 18 பென்ஸ் விகிதத்துக்கு ஆசி கூறி விட்டது. இந்த அநியாயங்களைக் கண்டு இந்தியன் திகைக்கின்றான்.

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date staff and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.



ஈசுவர லீலை

(என். பிச்சமூர்த்தி, கும்பகோணம்.)

முதல் நாள் பிரமாதமான புயல் அத்துடன் மழை. ஊரே நிர்த்தூளிப் பட்டது. காற்றுச் சுழன்று சுழன்று அடித்தது. ஆயிரம் பேய்களை அவிழ்த்து விட்டதுபோல 'ஹோ ஹோ' என்று அலறிற்று. எங்கும் மரங்கள் முறிந்துவிழும் ஓசை; சுவர்கள் இடிந்துவிழும் சப்தம். சாலையில் தென்னை மட்டைகளும், குறும்பைகளும், மரக் கிளைகளும் விழுந்து கிடந்தன. சூரியன் போனவழி தெரியவில்லை. ஊர், புயலுக்குத் தப்பியதே தாய்மார்கள் செய்த புண்யம்.

மறுநாள் காலைக்குள் புயல் நின்று போய்விட்டது. காற்றில் ஒரு தெளிவும் வெளியில் ஒரு வெளிச்சமும் கலந்திருந்தன. சூரியன் வரலாமா என்று கேட்டுக்கொண் டிருந்தான்.

ஒரு வீட்டுத் திண்ணையில் இருவர் உட்கார்ந் திருந்தனர். உதடு மறையும்படி உயர்ந்த நீலக் கம்பிளியால் ஒருவர் தலையில் முக்காடிட்டு உடலையும் மூடி இருந்தார். மாங்காய்ப் பானைக்கு வேடு கட்டி யிருப்பதுபோல் நீலக் கம்பிளிக்குமேல் ஒரு மFளரால் தலையைச் சுற்றிக் கட்டி யிருந்தார். கம்பிளி ஷர்ட்டும் போட்டுக்கொண் டிருந்தார். அவர்தான் இன்சினீர் ஸ்ரீ வித்யா உபாஸக திலகம் மணி அய்யர். மற்றவர் ஒரு பெரிய ஸம்ஸ்கிருத வித்வான். பெரிய பெரிய சமஸ்தானங்களிலும், அரச சபைகளிலும் பொன்னும், தோடாக்களும் சன்மானம் பெற்றவர். சன்மானமிகக் கிடைத்த சிவப்புச் சால்வைகளில் ஒன்றை எடுத்து, மேலே போர்த்துக்கொண் டிருந்தார். அவருக்குக் குழந்தை குட்டி கிடையாது. அவருடைய வித்வத்தை உத்தேசித்து, ஒரு மஹாராஜாவும் ஒரு மடாதிபதியும் அவருக்குத் தாராளமாக மாதச் சன்மானம் அனுப்பி வந்தனர்.

இஞ்சினீர் முகத்தைச் சுளித்துக்கொண்டு, தடங்கித் தடங்கி ஒரு ஏப்பம் விட்டார். உடனே "ராத்திரிச் சாப்பாடே ஜீர்ணமாகவில்லை" என்று அதற்கு வியாக்யானம் செய்தார். அதற்கு நேர் விரோதமாக, உலக விஷயங்களெல்லாம் (தன் ஜீரண விஷயம் உள்பட) வெகு திருப்திகரமாக நடந்து வருகிறதென்று சொல்வது போல் ஸம்ஸ்கிருத வித்வான் தடங்கலில்லாமல் ஒரு பெரிய ஏப்பம் விட்டார்:

"நேற்றைப் புயலைத்தான் ஈசுவர லீலை, பராசக்தி தாண்டவம் என்று சொல்லவேண்டும். அந்த அநந்த சக்தியின் லீலையைப் பார்க்க எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்! எவ்வளவு கண்கள் வேண்டும்!" என்று சொல்லி உள்ளம் பூரித்தார் இஞ்சினீர்.

இதைத்தான் நமது வேதத்தில் "நமஸ்தே வாயோ: த்வமேவ பிரத்யக்ஷம் பிரும்மாஸி" என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று வித்வான் கூறிய பின்பு, கண்களை மூடிக் கொண்டார்.

அப்பொழுது ஹீனஸ் வரத்தில் "சாமியாம் சாமி! கம்மனுட்டிக் காத்து! அதுக்குப் பைத்தியம் கியித்தியம் பிடிச்சூட்டாப்லே இருக்குது" என்று ஒருவன் தனக்குத்தானே பேசிக்கொண்டு தெருவில் சென்றது இவ்விருவர்களின் கவனத்தையும் பிடித்திழுத்தது. வித்வான்கள் வருணித்த "ஈசுவர லீலையை"ப் பயித்தியமாக்கி, "பிரும்மத்தை"க் "கம்மனுட்டி"யாக்கி விட்டானல்லவா, அந்த ஏழை!

அவன் இடுப்பில் மூன்று முழக் கந்தலும் தோள்மீது ஒன்றரை முழக் கந்தலும். ஒரு எலுமிச்சங்காய் புதைக்கக் கூடிய குழியில் அவன் கண்கள் கிடந்தன. பார்வையோ பஞ்சடைந்த சவப்பார்வை. கன்னங்கள் வாழைச் சருகுபோல் காய்ந்திருந்தன. அசிரத்தையாய்ப் பார்த்தால், எலும்புக்கூடு நடந்து வருவதாகத்தான் தோன்றும்.

அவனுடைய பேச்சைக் கேட்டதும் இருவரும் 'நாஸ்திகப் பயல்' என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டார்கள். வந்தவன் "சாமி! கண் பஞ்சடையுதுங்க. காது கும்முன்னு இருக்கு. நேத்து முழுக்க சுத்தப் பட்டினி. கொஞ்சம் சோறு போட உத்தரவு பண்ணுங்க" என்று உதறிய குரலில் கெஞ்சினான்.

இஞ்சினீர் தம் மனைவியைக் கூப்பிட்டு "ஏதாவது பழையது கிழையது இருந்தால் கொண்டுவந்து போடு" என்றார். அந்தம்மாள் கொஞ்சம் பழையதும் இரண்டு பச்சை மிளகாயும் உப்பும் கொண்டுவந்து போட்டாள்.

"அம்மா, தாயே! இது பத்தாதுங்க. கொஞ்சம் நீராரத்துலே ஒரு கல்லு உப்புப்போட்டுக் குடுங்க. அப்போத்தான் காது அடச்சது விட்டுப் போகுங்க."

"பாத்தரத்தை ஒன் கிட்டக் குடுத்தா, யாரு அதை அப்புறம் அலம்பறது? சரிப்படாது போ."

"அம்மா, அம்மா! கோடி புண்யமுண்டுங்க. பாத்தரத்தைக் குடுக்க வேண்டாம். கையிலே ஊத்துங்க; குடிச்சூடறேன். மஹாராஜியா இருப்பீங்க" என்று பல்லைக் காட்டினான்.

அதன் பேரில் நீராரத்தில் ஒரு உப்புப்போட்டு அவன் கையில் அந்த அம்மாள் ஊற்றினாள்.

"அம்மாடா! காதடப்பு பளிச்சுன்னு விட்டுச்சுங்க. நீங்க நல்லா இருக்கணும்" என்று கும்பிடுபோட்டான், நீராரத்தைச் சாப்பிட்டுவிட்டு.

இஞ்சினீர் மனது உருகிவிட்டது. "யாரப்பா நீ?" என்றார்.

"திருவாலூருங்க. பேர் திருவேங்கடம்."

"உனக்குப் பெண்டாட்டி, பிள்ளை இருக்கா?"

"இல்லிங்க."

"தொழில்?"

"கூலி வேலை."

"சரிதான். இங்கே எங்கே வந்தே?"

"எனக்குப் பாண்டுங்க. இந்த ஊர் ஆஸ்பத்திரிலே இருந்தேனுங்க. நேத்து

சாயங்காலமா வீட்டுக்குப் போகலாம் னூட்டாங்க. எனக்கு ஊடேது? அது மொதல் கொண்டு இந்தப் பொசல்லெ யும், மழையிலெயும் மாட்டிக்கிட்டே னுங்க. சோறே இல்லிங்க."

"பொசல் அடிச்சபோது எங்கே இருந்தே?"

"இந்தத் தெருக்கோடிலெ பாழும் திண்ணை இருக்கெ அதுலெ, அப் பிடியே மொழங்காலைக் கட்டிக்கிட்டு, ஈர வேட்டியை வவுத்துலெ போட்டுக் கிட்டு, குட்டுக்குட்டுன்னு உக்காந்தி ருந்தேனுங்க. ராவெக்கிப் பத்து மணி இருக்கக்குள்ளற ஒரு மாடு வேறெ திண் ணைக்கு வந்து சேந்துதுங்க. அதை நான் வெறட்டினுப் போகுதா? ஹூ ஹூம்! என் கால் மேலேயே அடி வச்சூட்டுது. இதப் பாருங்க காயம். வயத்துலெ மிதிச்சுது அத்தோடே நான் தொலைஞ்சு பூட்டேன்னுக்கெ நல்லா இருந்திருக்கும். அத்தோடெ இந்தாண்டெப் பக்கத்துச் செவர் வேறே விளுந்து திண்ணைத் தூண் நொறுங்கிப் போச்சு. இந்தாலெ கையிலே கல்லு விளுந்து சிராச்சு இருக்குப் பாருங்க. நான் தப்பிச்சதே பெரிசுங்க.........ஏதோ இன்னம் இந் தப் பூமிலே இருக்கணும் போலருக் குது. ஹூம்.......போயிட்டு வறேன். ஒங்களுக்குக் கோடி கோடி நமஸ்காரம் சாமி".

"ஆஹா, போயிட்டுவா அப்பா" என்றார் இஞ்சினீர்.

ஏழைத் திருவேங்கடம் போய் ஒரு வாரம் ஆகிவிட்டது. இதுவரையில் இந்த இரு பெரியாரும் ஈசுவர லீலை யைப்பற்றியாவது பராசக்தி தாண் டவத்தைப் பற்றியாவது பேசக் காணேம்.

புவியன்னை முன்னேறுகின்றாள்

(பாரதிதாஸன்)

உள்ளம் மலர்ந்த சிரிப்பொடு மின்னை
உதிர்க்கும் முகங்களொ ராயிரங் கோடி
கொள்ளும் பெரும்புவி ஆமெங்கள் அன்னை
குறை தவிர் ஒற்றைப் பெரும்பதம் நாடி
அள்ளும் மகிழ்ச்சியிலே நடக்கின்றாள்
அண்டங்கள் ஓட அவற்றொடு விண்ணில்
குள்ள நினைப்புக்கள் பேதங்கள் வென்றால்
கோலமெல்லாம் தருவாள் மலர்க் கண்ணில்

ஊணுடை வீடு படிப்புநல் லின்பம்
ஒவ்வொரு வர்க்கும் கிடைப்பது நாடி
மாண்புவி அன்னை பலப்பல துன்பம்
வாய்த்திடினும் தொடர்வாள்குறி தேடி
வீண்படு பேதங்கள் போரிடும் உள்ளம்
மேதினி அன்னை இப் பீடைகள் நண்ணாள்
காணலுற்றாள் பொது அன்பெனும் வெள்ளம்
கால் சலியாள் குறி மேல் வைத்த கண்ணாள்

மக்களை மக்கள் படுத்திடும் வெம்மை
வஞ்சகம், மிஞ்சும் மதஞ்செயும் தொல்லை,
மொய்க்க இருப்பினும் மேதினி அம்மை
முன் வைத்த காலினைப் பின்வைப்ப தில்லை
அக்கறை கொண்டுமுன் னேறிடு கின்றாள்
அண்டிடு தீமை ஒதுக்கினள் தேவி
புக்கன யாவும் பொதுப்பொருள் என்றாள்
போதம் விளைத்து நடந்தனள் தாவி.

TEETH TREATED SUPPLIED

7 A.M. TO 12 NOON. 2. P.M. TO 6. P.M.

Dr. S. J. MORO.
DENTAL SURGEON.
3/256, CHINA BAZAAR, ROAD.
(OPP. TO FLOWER — BAZAAR POLICE STATION) MADRAS.

30 வருட பிரக்யாதி

டாக்டர் ஜம்மி

வெங்கடாமணய்யாவின்

மருந்து

ஈரல், குலைக்கட்டி கோளாறென்னும் கொடிய நோயால் வருந்திக்கொண்டிருந்த எண்ணிறந்த பல குழந்தை களைக் காப்பாற்றியிருக்கிறது. அநேக வீடுகளைப் பொலி வுறச் செய்திருக்கிறது. இம்மருந்து எல்லா கெமிஸ்டு களிடமும் கிடைக்கும்.

8, சாலைத் தெரு, மயிலாப்பூர் சென்னை.



பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை

ஈ. கிருஷ்ணய்யர் எழுதியது

பாடகனின் ஸங்கீதத்துக்கு அநுஸரணையாயிருந்து, போஷித்து, ரஞ்சகப் படுத்தும் வாத்யமே பக்க வாத்யமாகும். உண்மையில் ஒரு கச்சேரியில், சுருதிக்காக ஒரு தம்புராவும், லயத்துக்காக ஒரு மிருதங்கமுமே போதுமானவை. இடையிடையே சிரம பரிஹாரத்துக்காகவோ, அல்லது அதிக ரஞ்சனைக்காகவோ இன்னும் ஒரு தந்தி வாத்யமான பிடிலையும் சேர்த்துக் கொள்வது வெகு கால வழக்கமாய் விட்டது. பக்க வாத்யமா யிருப்பதை விட்டுச் சில சமயங்களில் போட்டா போட்டிக் கட்சிபோல் எதிரிடையாக அமைந்து விடும்போது கஷ்டமாயிருக்கிறது. தென்னிந்தியாவில் என்ன சொல்லியும் ஸங்கீத ரஸிகர்களே அப்பெருமிதப் போட்டிகளை ஆதரிக்கும் போது, வாத்தியக்காரர்களைக் குறை கூறி யென்ன பயன்? நிற்க, இந்த பிடில் வாத்யத்தைக் கையாளுபவர் இக்காலத்தில் அநேகர் இருக்கின்றனர். ஆனால் இருப்பவரெல்லாம் இன்னிசையாளர் என்பதற்கில்லை. அழகுடன் வாசிப்பவர் மிகச் சிலரே. அச்சிலரில் ஒருவரே கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள்.

ஆறடி உயரம். ஆஜானுபாகு. பரந்த முகம். சபை நிறைந்த சரீரம். வயது சுமார் 35 தான். சிரித்தவதனம். கோபமில்லாக் குணம். பழகியவருடன் குழந்தை போன்ற வாத்ஸல்யம். கன்னத்தைத் தொட்டுக் கனிந்து கனிந்து பேசுவார். மரியாதையே உருவெடுத்தாற் போன்றவர். 'கும்பகோணம் நாஜு'க்குக்கும் குறைவில்லை. அவரைச் சங்கீத உலகில் அறியாதாரில்லை. பாடகரில் பெரியோரும் சிறியோரும் அவரவர் பக்க வாத்தியத்துக்குப் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை வரப்போவதாக அறிந்தவுடன் ஸந்தோஷத்துடன் தமது பாக்யமென்றெண்ணுவதுண்டு. பக்க வாத்யங்களால் தற்காலம் உண்டாகும் அவதியின் மர்மங்களை அறிந்தோருக்கே அதன் அருமை தெரியவரும். சில ஸங்கீத வித்வான்களை ரஹஸ்யமாய்க் கேட்டால் விபரம் அறியலாம்.

ஸ்ரீமான் பிள்ளையவர்கள் இசை வெள்ளாளர் குலத்தி லுதித்தவர். கொஞ்சம் செல்வமுள்ள குடும்பத்தில் பிறந்தார். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. பெருந் தன்மையாய் வளர்ந்தவர். ஆரம்பத்தில் சில வருஷங்களாக, உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யரிடம் வாய்ப் பாட்டுக் கற்றார். திருவிசைநல்லூர் நாராயணஸ்வாமி அய்யரிடமும் சீடராயிருந்தார். பிறகு திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யரின் முக்ய சிஷ்யரான ராமஸ்வாமி அய்யரிடம் பிடில் வாத்யம் பயின்றார். சாதாரணமாய், குருவிடம், அலைந்து தேடி அமர்ந்து, அவருக்கு ஓயாது சிச்ருஷை செய்து, வருஷக் கணக்காய்க் காத்திருந்து, கோபமில்லா வேளைப்பார்த்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சங்கீதம் பயிலும் கஷ்டங்களை அறியாதாரில்லை. ஆனால் பிள்ளையவர்கள் போதுமான ஸ்திதியிலுள்ள குடும்பத்தி லுதித்த பாக்யத்தினால், தமது குருவைக் கும்பகோணத்திலேயே அழைத்து வைத்துக்கொண்டு, போதுமான பணமும் குருதக்ஷிணையாகக் கொடுத்து, தமது வித்தையை ஆவலுடன் கற்றார். சீக்கிரம் தேர்ச்சியும் உற்றார். அவரது குரு, புல்லாங்குழல் நாகராஜராவ் அவர்களுக்கு அடிக்கடி பக்கவாத்யமாக வாசித்து வந்ததால், அவரிடத்தும் அதிகப் பழக்கம் ஏற்பட்டது. ஆகவே கேள்வி ஞானமும் விசாலமாகப் பெற்று இராஜமாணிக்கம் பிள்ளை இன்று பக்க வாத்ய வித்வான்களில் முதன்மையான ஒருவராக விளங்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கொஞ்ச காலமாக பிடில் தனி வாத்யக் கச்சேரியிலும் பிரஸித்தி பெற்று வருகிறார்.

நல்ல ஸாதகத்தினால் அவருடைய வாத்யத்தின் நாதம் இனிமை கொண்டது. அவ்வுறுதியான அஸ்திவாரத்தின் பேரில் அவர் கட்டும் இசை மாளிகைகளும் விமரிசையாய் ஒலிக்கின்றன. உருப்படிகள் தாராளமாகப் பாடம் உண்டு. தியாகராஜர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் இவர்களுடைய கீர்த்தனைகளோடு ச்யாமா சாஸ்திரி கீர்த்தனைகளிலும் கொஞ்சம் விசேஷப் பரிச்சய மிருப்பதுபோல் தெரிகிறது. சில பதங்களும் அறிவார். இத்துடன் தீக்ஷிதர் கீர்த்தனைகளையும் விசேஷமாக ஸாதகம்செய்து கொண்டாரானால், மிகவும் மேன்மையா யிருக்கும். ராகங்களில் 'பாணி' என்பதும் காணப்படுகிறது. பிடிகளும், குழைவுகளும், கமகங்களும் பொருத்தமாக அமைகின்றன. அனுபவித்தே வாசிக்கின்றார். இன்னும் நன்கு வளர்ந்து அழகுபடுத்தக்கூடிய அம்சங்களு மிருக்கின்றன. மொத்தத்தில் அவர் ஸங்கீதத்தில் ராக

பாவம் நன்கு அமைந்திருக்கிறது. அனுவசியமான 'செப்படி வித்தை'களிலோ, தடபுடல்களிலோ நுழைவதில்லை. தனி ஆவர்த்தனங்கள் வாசிக்கும்போதும் ஸ்வரப்ரஸ்தாரங்கள் செய்யும்போதும் மட்டுக்கு மிஞ்சிப்போவதில்லை. ஆகவே ரஸிகர் அவரைச் சிறப்பித்துப் பேசுகிறார்கள்.

பாடகன் பாட்டில், மேன்மேலும் ஸங்கதிகள் போடும்போதும், நெரவலோ ஸ்வரப்ரஸ்தாரமோ செய்யும்போதும், பின்பற்றுவதில்தான் பக்கவாத்யக்காரர்களின் ஸாமர்த்தியம் தெரியவரும். எல்லாவற்றையும் பின்பற்றவேண்டுமென்ற ஆசையுடன் ஆரம்பித்து நடுவில் 'குட்டிக்கரணம்' போடும் வாத்தியக்காரர்களுமுண்டு. குறுக்கே விழுந்து இடைஞ்சல் செய்வோரும் உளர். எது முடியும், எது முடியாதெனக் கண்டு, முடிந்தவிடத்து மனதுடன் பின்பற்றுவதும், முடியாதவிடத்து நாஜூக்காக மாறிமாறி சமாளிப்பதுமான விதரணையறிவு, பிள்ளையவர்களிடம் வெளிப்படையாகக் காணப்படும். பக்கவாத்யம் வாசிப்பவருக்கு இடங்கொடாது பாடும் பாடகரிடம் கோபித்துக்கொள்வதுமில்லை. நிதான புத்தியுள்ள எவரும் இந்த விஷயத்தில் கோபங் கொள்ள வேண்டுவதில்லை. ஏனெனில் இடங் கிடையாவிடில் வேலைதானே குறைவு; கச்சேரிக்கு வாங்கும் சன்மானம் குறைவில்லையே! தான் படும் கஷ்டம் தனக்கே தெரிந்திருந்த போதிலும், மிகத்தாழ்ந்த ஆதாரச் சுருதியை வைத்துப் பாடும் பிரபல வித்வான் ஒருவருக்குப் பக்கவாத்யக்காரராக உட்கார்ந்து அழகாய்ச் சமாளிக்கக் கூடியவர் என்ற பெயரும் படைத்துவிட்டார் ஸ்ரீ ராஜமாணிக்கம்.

பாடகனின் பாட்டுக்கு அநுஸரணையாய்ப் பக்கவாத்யத்தில் வாசிப்பது இலேசமான காரியமுமல்ல; எல்லோருக்கும் எளிதாகாது. வாய்ப்பாட்டுப் பிடிகளெல்லாம் வாத்தியத்தில் வந்துவிடாது. பாட வித்யாசங்களோ அநேகம். பின்பற்ற வேண்டுமே என்ற மனப்பான்மை வருவதோ கடினம். பாட்டுடன் அநுஸரித்து வாசிப்பதற்கு வாய்ப் பாட்டிலும் நல்ல பரிச்சயம் கொண்டு, ஒவ்வொரு தந்தியிலும் கமகத்துடன்கூடிய நல்ல ஸாதகமும் இருத்தல் வேண்டுமென அறிந்தோர் கூறுகின்றனர். அந்தக் குணங்கள் பிள்ளையவர்களிடம் நன்கு அமைந்திருப்பதால் அவர் பக்கவாத்யத்துக்கு வருவாரா, வருவாராவென்று எல்லோரும் ஆசைப்படுவது ஆச்சரியமல்ல. பொதுவாய்த் தமது வித்தையில் உயரிய நோக்கம் கொண்டவர் ஸ்ரீமான் பிள்ளை. எனினும் இவ்வளவெல்லாம் அமையப்பெற்றவர் கச்சேரி வித்வான்களை ஒருமாதிரி விலைக்கு வாங்கும் சில நூதன ஏற்பாடுகளில் சிக்கிக்கொள்ளாதபடி தைரியமும் கொண்டிருந்திருக்கலாம்! படித்த பிரமுகர்கள் அடங்கிய ஸங்கீத உலகமே தலைகீழாய்ப் போகும்போது, வித்வான்களைச் சொல்லிப் பயனென்ன? மொத்தத்தில் ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் பக்கவாத்ய வித்தையை அலங்கரிப்பவரில் ஒரு முக்கியமான வித்வானே யாவர்.

சிறியதோர் காட்சி, பெரியதோர் படம்

(திருச்சி டாக்டர் வி. சுவாமிநாத சாஸ்திரி.)

முன்னொரு நாள் மகாத்மா காந்தியடிகளைத் தரிசிக்கச் சென்றபோது மறக்கொணாத காட்சியொன்றைக் கண்டேன். சமீபத்தில் தனது நாயகனை இழந்து மாறாத் துயரத்திலிருந்த, மங்கை, ஒருவர், வெண் கதர் உடுத்தி, வெண்பூச்சணிந்து, அலங்கார ஆபரணங்கள் எதுவுமின்றி, மகாத்மாவைத் தரிசித்து ஆறுதலடையவும், அவரது ஹரிஜன சேவைக்குத் தம்மாலான உதவி புரியவும் வந்திருந்தனர். அந்த அம்மணியைப் பற்றிக் கொஞ்சமறிந்தவர்களும் இதைக் கண்டிருந்தால் கலங்காதிருக்க இயலாதெனில், அவருடன் நெருங்கிப் பழகியவரின் நெஞ்சம் எங்ஙனம் பதைத்திருக்கும்?

புத்தர் பெருமான் இவ்வுலகின்கண் உலாவும் காலத்து, இதேமாதிரி ஓர் காட்சி நடந்ததாகச் சொல்வார்கள். தனது அருமைப் புதல்வனை இழந்த பெண்மணி உயிரிழந்த தனது குழந்தையின் உடலை மார்போடணைத்து எடுத்து வந்து, புத்தர் பெருமான் முன் வைத்து, அதற்கு மீண்டும் உயிர்ப்பிச்சை அளிக்குமாறு வேண்டினளாம். பெருமான் அவள் துக்கத்தைக் கண்டு துடித்து, அவளுக்குத் தக்க பதில் உரைப்பதற்குச் சகியாதவராய் "அம்மணி! இந்தப் பிள்ளையை பிழைப்பிக்க வேண்டுமாயின், ஒரு சாவுகூட என்றைக்கும் கண்டறியாத ஒரு குடும்பத்திற் பிறந்த புனிதர் ஒருவரை அழைத்து வா! அவர் கையால் குழந்தையைத் தழுவினால், மீண்டும், உயிருடன் குழந்தை உலாவும்" என்றனராம். அந்த அம்மணி வீடு வீடாகச் சென்று விசாரித்தாளாம். ஒவ்வொரு வீட்டிலும் 'சாவு' உண்டு என்பதை அறிந்த பின்பு மனத்தேறுதல் கொண்டாளாம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னே அஹிம்சா தர்மப் பிரசாரம் செய்த ஒரு மகா புருஷனின் முன்னிலையில் நடந்த அக்காட்சி மறுபடியும் இந்த நவயுகத்தில் இன்னொரு அகிம்சா தர்ம மகா முனியின் முன்னே மீண்டும் நடப்பதாகவே இக்காட்சி இருந்தது. புத்தர் பிரான் அன்று செய்த பெரிய உபதேசமும், கதையும் எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு விநாடியும் உலகில் எவ்வளவு உயிர்கள் பிறக்கின்றனவென்று யாராவது கணக்குக் கூற முடியுமா? அதே மாதிரிதான் இறப்பும். பிரபஞ்சச் சட்டத்தில் துளிக்கூடச் சலுகையில்லை; நாயகனின் உயிரைச் சாவித்திரி மீட்டாளெனக் கூறுகிறது புராணம். ஆனால் அன்றைக்கு அவள் மீட்டுக் கொணர்ந்ததாகக் கூறப்படும் சத்தியவான் இன்றைக்கு எங்காவது உலகில் இருக்கின்றானா? என்றைக்கோ ஒரு நாள் அவனும் மறைந்து விட்டானல்லவா? நிற்க,

பிரார்த்தனைகளால் தெய்வங்களின் மனமிளகி விடுவது உண்மையாயின், நேற்று நான் மண்ட மகளின் பிரார்த்தனைகளுக்குத் தெய்வங்கள் இரங்கியே தீரவேண்டும்; அவளுக்கு ஆறுதல் ஏற்படத்தான் வேண்டும். தெய்வங்களின் காதுகளையும் வசீகரிக்கவல்ல குரல் இவ்வுலகில் உண்டெனில், அது அந்தச் சுந்தரியின் பிரார்த்தனைக் குரலேயெனத் தமிழர் அறிவர். ஆனால் அவள் நாயகனின் கந்தர்வகானம் இந்தப் பூவுலகிற்கு மட்டும் சொந்தமாயென்ன? வேறுலகத்து விஞ்சையர் எவ்வளவு காலம் எட்டியிருந்து கேட்பார்கள்? "கிட்ட வா, அப்பா" என்று அவனை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். தனது நாயகனின் பொய்யுடம்பு போன பின்பு அவரது புகழுடம்பை வளர்க்கவேண்டியது இந்தச் சுந்தரியின் கடமையாயிருக்கிறது.



பூமியின் ஆட்டம்

[காலஞ்சென்ற A. S. கஸ்தூரி ரங்கய்யர் B. A. L. T. அவர்கள் எழுதிய இக்கட்டுரையைப் பிரசுரித்துக் கொள்ள அநுமதி தந்த அல்லயன்ஸ் கம்பெனி ஸ்ரீமான் குப்புசாமி அய்யர் அவர்களுக்கு நமது நன்றி புரித்தாகுக.]

பூகம்பத்தின் செயல்

பூகம்பம் என்ற பதத்திற்கு நிலத்தின் நடுக்கம் என்பது பொருள். அது உண்டாகும் காலத்தில் பூமியின் மேற்பாகம், ஸமுத்திரத்தின் மேற்பாகத்தைப் போல உயர்ந்தும் தாழ்ந்தும் அலைபாய்ந்தும் அசையும். அது உண்டாகும் காலத்தில் யாராவது ஒருவர் தரையில் படுத்திருப்பார்களானால் அவர்களை அந்த அசைவு புரட்டிவிடும். சிலருக்கு அது தம்மைத் தொட்டிலில் வைத்து ஆட்டுவது போலத் தோன்றும். அது உண்டாவதை நாம் முன்னதாக அறிவது மிகக் கஷ்டம். அப்படி இருப்பினும் இக்காலத்தில் ஒருவித யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அதன் மூலமாகப் பூகம்பம் வரப்போகிறதென்று இரண்டொரு நாளைக்குமுன் தெரிந்துகொள்ளலாம். ஆனால், அது முன்னதாகக் குறிப்பிப்பவையெல்லாம் நடந்து தீரும் என்பது நிச்சயமல்ல. ஆதலால் அதைப் பூரணமாக நாம் நம்ப விடமில்லை.

எரிமலைகளே காரணம்

உலகில் எரிமலைகள் இருக்கும் இடங்களிலெல்லாம் பூகம்பங்களும் உண்டு. இதுவுமல்லாமல் பூமத்தியக்கடல், மத்ய ஆசியா, அமெரிக்காவின் மேற்குப் பாகங்கள் ஆகியவைகளிலும், ஹிமாலயப் பிராஞ்சியங்களிலும் பூகம்பங்கள் அடிக்கடி உண்டாவது வழக்கம். மத்ய அமெரிக்கா, மத்யக்கடலின் மத்ய பாகம், ஹிமாசலப் பிராஞ்சியம் (ஸிம்லா) என்னும் இவ்விடங்களிலும் அடிக்கடி பூகம்பங்கள் நிகழ்ந்து வருகின்றன. பட்டணம், சென்னை ராஜதானி, பஸிபிக் தீவுகளுட் சில, மத்திய ஐரோப்பா என்னும் இவ்விடங்களில் பலநாளைக் கொருவிசை பூகம்பம் உண்டாகின்றது. இங்கு அப்படி உண்டாகும்பொழுது அதிக நாசம் உண்டாவதில்லை. பூமியில் பூகம்பமே இல்லாதவிடம் கிடையாது என்று சொல்லலாம். ஜப்பான் தீவுகளில் வருஷத்திற்குச் சற்றேறக்குறைய அறுபது விசை கம்பங்கள் உண்டாகின்றனவாம்.

பூகம்பம் என்பது என்ன?

பூகம்பங்கள் உண்டாகும் காலத்தில் தோற்றுபவைகளை உற்று நோக்குவோம். லிஸ்பன் நகரத்தில் உண்டானதுபோல, பூகம்பம் உண்டாவதற்குச் சில நிமிஷங்களுக்குமுன் சில ஸமயங்களில் பீரங்கி வெடிப்பதுபோல் சப்தம் ஒன்று கேட்கும். இதனால் தப்பி ஓடுபவருக்கு ஓர் பிரயோசனமுமில்லை. ஜனங்கள் தப்பி ஓட எண்ணுமுன் பூமி அசைந்து ஆபத்தை உண்டாக்கும். பூகம்பங்களால் தாக்கப்பட்ட பாகங்கள் எல்லாவற்றிலும் ஒரே ஸமயத்தில் அசைவு உண்டாவதில்லை. அசைவு முதலில் ஓர் இடத்தில் உண்டாகும். குளத்தில் கல் எறிந்தால் நான்கு பக்கங்களிலும் வரவர அகன்ற வட்டங்களாக அலை பரந்து போவதுபோல பூகம்பம் முதலில் தோன்று மிடத்திருந்து நான்கு பக்கங்களிலும், பூமி அலை பாய்ந்து போகும். தண்ணீரில் உண்டாகும் அலையைப் போன்றதுதான் பூகம்பத்தால் உண்டாகும் அசைவும். பூமியில் உண்டாகும் அலையும் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடம் ஒரு நொடிக்கு 2000-முதல் 3000-அடிகள் வரை அதி வேகமாக ஓடும். ஒருதரம் ஓடிய பின்பு முந்தியதைவிடப் பலம் குறைந்ததாய் இரண்டொரு அலைகளும் வரும். பூகம்ப அலைகள் அகல அகலப் பலம் குறையும். ஆகையால் அசைவு முதலில் தோன்றும் மத்ய பாகத்தில்தான் பூகம்பவேகம் அதிகம். இந்த மத்ய பாகத்தை விட்டுப் போகப் போகப் பூகம்பத்தின் வேகம் குறையும். அலை அகன்று ஓடும் குளத்தில் பாய்மரங்களையுடைய ஒரு சிறிய கப்பல் இருந்தால் அதன் நுனி எவ்வாறு அசைந்தாடுமோ அவ்வாறு பூகம்ப காலங்களில் வீடுகளின் மேற்பாகங்கள், மரங்களின் நுனி முதலியவை அசைந்தாடும். இவ்வாறு வீடுகள் முதலியவை ஆடுங்கால் அவைகளின் அஸ்திவாரங்கள் அல்லது வேர்கள் தளர, அவைகள் கீழே சாய்ந்துவிடும். பள்ளத்தாக்குகளில் பூகம்பத்தால் களிமண்கட்டிகள் கற்பாறைகள் முதலியன பெயர்ந்து விழ, அங்கு ஓடும் நதிகள் அடைபட்டு ஏரிகளாகி முடிவில் அடைப்பை உடைத்துக் கொண்டு வேகமாய்ப் பாய்ந்து இருபக்கங்களிலுமுள்ள பொருள்களை யழிக்கும். சிற்சில ஸமயங்களில் அசைவின் கொடுமையால் பூமி சிற்சில விடங்களில் விரிய, அப்பிளவுகளுள் மரம் வீடுகள் முதலியன விழும். பின்பு உடனே அப்பிளவுகள் மூடிக்கொள்ளும். சிற்சில ஸமயங்களில் அப்பிளவுகள் மூடிக்கொள்ளாமல் தண்ணீர் ஓட்டத்தால் வரவரப் பள்ளமாகிக்கொண்டே வரும். சிற்சில விடங்களில் பூமி திடீரென்று தாழ்ந்து பள்ளத்தாக் காகிவிடும்; அல்லது திடீரென்று உயர்ந்து மலையாகிவிடும்.

பழைய உதாரணம்

பூகம்ப காலங்களில் பூகம்பம் வந்து தாக்கும் முதற்பாகமாகிய மத்ய பாகத்தில்தான் அதிக நாசம் உண்டாகிறது. 1755-ம் வருஷம் நவம்பர்மாதம் 1௳ லிஸ்பன் நகரத்தில் காலை 9½-மணிக்கு எல்லோரும் தமது வேலைகளுக்கு ஆயத்தமாகுங் காலத்தில் திடீரென்று பூமிக்குள் ஓர் பீரங்கிச் சத்தம் போன்றதோர் சத்தம் கேட்டது. எல்லோரும் என்ன என்று திகைத்துத் தலையை உயர்த்துமுன் பட்டணம் முழுவதும் பூகம்பத்தால் தவிடுபொடியாக, அதன் அடியில் அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டனர். இது போதாதென்று உடனே நெருப்பும் கடல் நீரும் சேர்ந்து நாசத்தைப் பூர்த்தி செய்துவிட்டன. முற்காலத்தில் பூமத்யக்கடலின் கீழ்ப்பாகத்தில் உண்டான பூகம்பத்தில் ரோட்ஸ் என்ற பட்டணத்தின் துறைமுக வாயிலில் காலை விரித்து நின்றுகொண்டு கப்பல் தாராளமாகப் போக இடங்கொடுத்திருந்த கேலோஸஸ் என்ற பெரிய வெண்கலப் பிம்பம் ஸமுத்திரத்தில் விழுந்து அழிந்தது. இம்மாதிரி பூகம்பகளால் அநேக சேதம் விளைவதுண்டு.

அக்னிக்குழம்பு அலைகள்

நாச ஹேதுவான பூகம்பம் உண்டாகக் காரணம் என்ன? காரணம் இன்னவை என்று நன்றாக விளங்கா

தாயினும் ஒருவாறு அவைகளை யூகித்து அறியலாம். பூமியுள் உண்டாகும் ஒரு வித அதிர்ச்சியே பூகம்பங்களுக்குக் காரணம். இது உண்டானதும் உண்டான பாகத்தில் இருக்கும் கடின பூமி திரவமாக, அப்பொழுது உண்டாகும் அக்கினிக்குழம்பில் அலை கிளம்பி பூமியின் மேற்பாகத்தைத் தாக்குகின்றது. இந்த அலை கோளாகாரமாக எல்லாப் பக்கங்களிலும் போவதால் மிகவும் அருகிலுள்ள பூமியின் மேற்பாகத்தை முதலில் வேகமாகத் தாக்க அதுவே பூகம்பத்தின் மத்ய பாகமாகின்றது. நாழிகையாக ஆகத்தான் கோளாகாரமாக வெளிவரும் அலைகள் மத்ய பாகத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களை முறையே குறைந்த பலத்தோடு தாக்க பூகம்ப அலைகள் ஒருபுறம் இருந்து மற்றோர்புறம் ஓடுவனபோலக் காணப்படுகின்றன. இதிலிருந்து பூமியின் உஷ்ணத்தால் உண்டாகும் அக்கினிக் குழம்பில் அலைகள் உண்டாவதே பூகம்பத்தின் காரணம் என்பது விளங்கும். இதையே ஷேக்ஸ்பியர் மஹாகவி 'பூமிக்கு ஜ்வரம் உண்டாக அது நடுங்கிற்று' என்றார். இந்தக் காரணத்தின் மூலமாக முன் நாம் கூறியுள்ள தோற்றங்களை எளிதில் விளக்கலாம்.

மலையும், மடுவும், திசையும் மாறும்

பூகம்பங்களால் ஏற்படும் காரியங்கள் யாவை என்று விசாரிப்போம். பூகம்பங்களின் ஸ்வரூபத்தை விசாரிக்குங்கால் மேல் கூறியுள்ள விஷயங்களிலிருந்து அது எரிமலைகளைவிட உலகத்தில் நாசம் செய்வதில் அதிக சக்தி உடையது என்பது விளங்கிற்று. அதனோடு நீரும் நெருப்பும் சேர்ந்து நாசத்தைப் பூர்த்தி செய்யும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதனால் ஒரு நிமிஷத்தில் மலைகள் உண்டாகி மற்றைய நிமிஷத்தில் அமிழ்ந்து விடுகின்றன. ஆதலால் சில ஊர்களில் பூகம்பம் முடிந்ததும் மலைமேலிருந்தவர்கள் பள்ளத்தாக்கிலும், பள்ளத்தாக்கிலிருந்தவர்கள் மலைச்சிகரங்களிலும் மாறி நிறுத்தப்படுவார்கள். வேறு சில விடங்களில் பூகம்பத்தால் மனிதர்கள் தமது வீடுகளோடு சேதமொன்றும் இன்றி வேறோரிடத்திற்கு மாற்றப்படுவார்கள். பூமி பிளக்க அதனுள் அகப்பட்டன யாவும் உடனே மூடப்பட்டு அழியும், சுழல் காற்றால் சருகுகள் சுழலுவது போல் சில பாகங்களில் வஸ்துக்கள் பூகம்பத்தால் சுழற்றப் படுவதுண்டு. இதனால் ஒரு பக்கம் பார்த்திருந்த வீடுகள் வேறுபக்கமாகத் திருப்பப் படுவதுமுண்டு.

ஒரு கோடியினின்று மறுகோடிக்கு

பூகம்பத்தால் உண்டாகும் அதிர்ச்சி வெகுதூரம் வரையில் சென்று எட்டுகின்றது. லிஸ்பனில் நடந்த பூகம்பத்தால் ஸ்காட்லண்டு ஏரிகளில் மிகுந்த அலைகள் உண்டாயின. அருகிலிருந்த ஆல்ப்ஸ், பிரனீஸ் முதலிய மலைகள் வேரோடு அசைந்தன. ஸமுத்திரத்தில் அலை உண்டாக அது அமெரிக்கா வரையில் சென்று எட்டிற்று. அருகாமையிலிருக்கும் ஆப்ரிக்காவிலுள்ள மொராக்கோவில் சில அழகிய பட்டணங்கள் அழிந்தன.

எரிமலை உற்பாதம் பிரமாதமாக நடக்குங்கால் பூகம்பங்கள் குறைந்து இல்லாமல் போய்விடுகின்றன. ஆகையால் எரிமலை உற்பாதங்கள் இல்லாவிடில் பூமி முழுவதும் பூகம்பங்களால் அழியும் என்பதற்கு என்ன சந்தேகம்?

BOOKS OF THE HOUR

	Rs.	A.
By Mahatma Gandhi		
Satyagraha in South Africa ...	4	8
Young India—I (1919-22) ...	4	0
Young India—II (1924-26) ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8
By C. Rajagopalachar		
Chats Behind Bars ...	0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study ...	0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages ...	2	0
Gandhiji in Ceylon ...	1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran ...	2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi ...	3	8
By Richard B. Gregg		
Economics of Khaddar ...	1	0
Gandhiji's Satyagraha (2 Vols.)	2	8
Gandhism & Socialism ...	0	2

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

வர வர இந்தியாவின் நிலைமை

'எல்லாம் நமது தலைவிதி' என்று வேதாந்தம் பேசி விட்டுப் பொறுமையோடு கிடக்கின்றவர்கள் இந்தத் தேசத்தில்தான் ஏராளம். இன்னொரு நாட்டில் ஜனங்கள் இப்படி இருக்கவே மாட்டார்கள். இந்தத் தேசத்தில் சுயராஜ்யத் துரைத்தனம் இருந்து கொண்டிருக்குமாகில் தேசம் இப்படி யிருக்குமா? நகரங்களிலும் பட்டணங்களிலுமுள்ளவர்களின் மீதுள்ள வரிச்சுமை ஒருபுறம் இருக்கட்டும். இப்போது மிக மிகக் கஷ்டப்படுகின்றவர்கள் கிராமவாசிகள்தான். நிலக் கந்தாயம், பண்ணைச் செலவு, கடன்சுமை முதலியவைகள், விளைச்சலின் பெரும் பகுதியை விழுங்கி விடுகின்றன. நிலவரியில் அரைக்கால் பங்கு வஜாச் செய்திருப்பதாகச் சொல்வதெல்லாம் எந்த மூலைக்கு உபயோகம்? ஐந்து வருஷத்துக்கு முன்னே கிராமவாஸிகள் 1000 கோடி ரூபாய் கடன்பட்டிருந்தார்களென்று மதிப்புப் போடப்பட்டிருந்தது. இப்போது அந்தக் கடன் 2000 கோடி ரூபாய்க்கு ஏறியிருக்கும். விலை வாசிகள் விழுந்து போய் விட்டபடியால் முன்னே யிருந்த நூறு ரூபா வரித் தொகை இருநூறு ரூபாயாகக் குடியானவனின் சுமை கனத்துப்போய்விட்டது. சென்ற நான்கு வருஷத்துக்குள் புது வரிகளும் போடப்பட்டிருக்கின்றன.

சட்ட சபைகளில் ஏதேதோ மசோதாக்கள் வந்துகொண்டிருக்கின்றன. கடன் பட்டவன்மீது, தடபுடலாக "நிறைவேற்றுதல்" செய்யக் கூடாதென்று ஓர் மசோதா. நிலவரிகளைக் குறைக்க வேண்டுமென்று இன்னொரு மசோதா. தேசத்தில் இப்போது ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டமோ சொல்லித் தொலையாது. இந்தக் கொடுமைகளை விலக்க, என்னென்ன செய்யப்படுகின்றன? அதுதான் தற்போதைய முக்கியக் கேள்வி.

—ஹிந்து அப்ஸர்வர்.

வீட்டுக்காரர்

(" இராஜாத்தி "யின் கடிதம்.)

அன்புமிக்க ரங்கம்,

பார்த்தாயா! இது என்ன சாமர்த்தியம் என்று கேட்கிறேன்? இருந்தாலும், அம்மா, உனக்கு இந்த 'ராங்கி' கூடாது. நான் நாலு கடிதாசு எழுதினால், நீ ஒன்றே ஒன்றுதான் எழுதுவதென்று நினைத்திருக்கிறாயா? என்னுடைய நாலு கடிதத்துக்கு உன்னுடைய ஒரு கடிதமே சமம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்போலிருக்கிறது. நீ என்னவாயிருந்தாலும் கெட்டிக்காரிதான். இந்தத் தடவை நானும் உனக்கு ஒரு விஷயமும் எழுதப் போகிறதில்லை. நம்மைப் போலவே ஒரு சகோதரியிடமிருந்து வந்த கடிதம் ஒன்றை மாத்திரம், சில சிறு திருத்தங்களுடன் கீழே நகல் செய்து அனுப்பியிருக்கிறேன்; பார்த்துக்கொள் :—

* *

"மவா ராஜாத்தியம்மாளுக்கு, பொன்னம்மை நமஷ்காரம். நான் ஒங்கமாதிரி ரொம்பப் படிச்சவ இல்லெ. என் கடிதாசி ரொம்பத் தப்பிதமிருக்கும். அதுக்கு மன்னிச்சிக் கிடுங்க.

"யாரோ ஒருத்தி எழுதறாளேன்னு நெனச்சு ஒதுக்கப்படாது. எனக்கு ஒங்களெ நேரே தெரியாது. கும்பகோணம் அம்மாக்கண்ணுதான் சொன்னாள். பெண்களுக்கு நீங்க சவாயம் பண்ணறதாச் சொன்னா.

எங் கதையெச் சொன்னா, கல்லும் உருகும்; மாமும் அழும். அதெல்லாம் வாண்டாம். எங்க பிறந்த வூட்டிலெ அன்னம் மாதிரி வளர்ந்தேன். எனக்கு அங்கெ அன்னம் என்று பேருகூட உண்டு. பெரிய குடும்பத்திலெதான் பிறந்து வளர்ந்தேன். நான் புகுந்த வீடும் பெரிய வூடுதான். நம்ப வூட்டுக்காரரும் முதல்லெ என்னெ ரெத்னம் மாதிரிதான் கண்ணுக்குக் கண்ணா வெச்சிருந்தாரு.

"இப்பத்தான் நம்ப வூட்டுக்காரரு ஒரு மாதிரியாப் போயிட்டாரு. பாவிப் பசங்க கெடுத்துப் போட்டான். நான் ஆறு கொழந்தெங்களோடே தவிக்கறேன். வூட்டுக்கு வரவே மாட்டேங்கராரு. எப்ப பாத்தாலும் சூதாட்டம் ஆடுறாராம். இந்தப் பாவி வெள்ளக்காரன் சீட்டில்லெ பணத்தெயெல்லாம் விழுங்குதாம்! அது என்ன அம்மா! எப்பிடித்தான் போகுதோ இந்தப் பணமெல்லாம், தெரியலெ.

"என் நகெயெல்லாம் வாங்கிட்டுப் போயிட்டாரு. நான் கொடுத்துாட்டேன். எல்லாம் அவர் சேஞ்சு போட்டதுதானே. அவர் இல்லாட்டி, அப்பா போட்டாரு. எல்லாம் ஆம்பிள்ளேங்க போட்டது. ஒடமையெல்லாம் ஆம்புளெங்களுக்குத்தானே சொந்தம். அதிலெ ஒண்ணும் எனக்குக் கோபமே கெடெயாது. ஆனா, நம்ப வூட்டுக்காரரு நமக்குச் சொந்தமில்லாமெப்போனா, நம்மாலெ எப்பிடிப் பொறுக்க முடியும்?

"கஞ்சியோ, கந்தெயோ, ஏதோ குடித்து, ஏதோ கட்டி வாழலாம். ஆனா, அவர் வூட்டுக்கு வரதே கெடெயாது. எவளோ ஒரு கூத்தியாள் இருக்காளாம். எனக்கு அதிலெ நம்பிக்கயெ கெடையாது. ஆனா, நான் என்ன செய்யறது? வயலெல்லாம் நல்லாத்தான் வெளெயுது. ஆனா, எல்லாத்தெயும் எங்கேயோ கொண்டு போனாங்க. அதெப் பாக்கச்சே மாத்தரம் வயறு எரியுது. நெல்லு லெட்சுமி இல்லெயா? நம்ம வூட்லே குடியிருக்க வேண்டிய லெட்சுமியெ யாரோ பிடிச்சு இழுத்துக்கிட்டுப் போனா எப்படி இருக்கும்!

"நாலு நாளுக்கு முன்னே, எனக்கே தாங்கலெ. களத்திலெ போய்ச் சண்டெ போட்டேன். வூட்டுக்காரர் வல்லே. யாரோ ஒருத்தன், அந்தச் செறுக்கி காரியஸ்தனாம். என்னெப் புடிச்சித் தள்ளி விட்டான். நெலமெல்லாம் என் புருசனுக்குச் சொந்தமில்லெயாம். ஐயோ! என் குழந்தெங்களுக்கும் சொந்தமில்லையா! மணி மணியாத் தங்கம் மாதிரி இருந்த அந்த நெல்லெ அவன் அள்ளிண்டு போயிட்டான். நான் பெண்பிள்ளே; அப்பிடி நெனக்கப்படாது. ஆனாலும், நான் என்ன செய்வேன்? எண்ணம், தானா உண்டாகுது. அந்த நெலமெல்லாம் என் சொந்தமா இருந்தா, இந்த லெட்சுமி இப்பிடிப் பரதேசம் போவாளா? நம்ப குழந்தைங்கள்ளாம் இப்படித் தவிக்குமா?

"எனக்கு ஒண்ணும் புரியலெ. அடுத்த வூட்டுச் சுப்பம்மா ஒரு யோசனெ சொல்றா. அம்மா! எனக்குப் பயமாருக்கு! என்ன செய்வேன்? மருந்து கிருந்து போடலாம்னு சொல்றா. அந்தச் செறுக்கி என்ன சொக்குப் பொடி போட்டிருக்காளோ! நான் வேறே

கேசவர்த்தினி

மயிர் உதிர்வதை நிறுத்துவது.

வழுக்கை செம்பட்டை இள நரைகளைப் போக்குவது.

கூந்தலை நீண்டு செறிந்து வளரச் செய்வது.

விலை அணா 12. மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை, லஸ், மயிலாப்பூர்.

மருந்து போட்டா, அவர் தேகம் தாங்குமோ? அவரெ நான் எப்படித்தான் பாக்கறது!

"இத்தனெ சங்கடம் ஏதுக்கு? அந்த சொத்து மாத்திரம் அவருக்கு இல்லாட்டி அவர் இப்பிடிப் போவாரா? அதுலெ பாதியாவது எனக்கு இருந்தா! அப்பிடி நான் நெனப்பது தப்புத்தான். வேறே என்ன செய்யறது? நீங்க ஏதாவது பண்ண முடியுமா?

"நீங்க இருக்கறது, நல்ல டவுனுச்சே. அங்கே யாராவது மந்தரவாதி இருக்கானா? நல்ல வைத்தியன் இருப்பானே. யாரெயாவது அனுப்ப முடியுமா? எங்கிட்ட ஒரு காசு கூட இப்ப கெடையாது. ஆனா, என் வூட்டுக் காரரே எனக்குச் சொந்தமாக்கினா, நான் பெரிய சொத்துக்காரியாகி விடுவேன். என்ன வேணாலும் கொடுப்பேன். பணமே இல்லாட்டியும் புண்ணியமில்லியா? ஒரு வீட்டெ வாழ வைச்சால் கோடி கோடி புண்ணிய மாமே; சாஸ்திரங்கூடச் சொல்லுதாமே. ஒங்களுக்குத் தெரியாததா?

"நான் பிச்செகூட எடுத்தூடுவேன். இந்தக் கொழந்தெங்களுக் காகத்தான் இத்தனெ சங்கடமும். மறுபடியும் மன்னிச்சுக் கிடுங்க. நமஷ்காரம்.—இப்படிக்கு அம்மா சொல்படி, முத்தையன்."

* * *

ரங்கம்! கடிதத்தைப் படித்து விட்டாய். இது என்ன பிரச்னையை எழுப்புகிற தென்றுதான் உனக்குத் தெரியவில்லை; எனக்குந்தான் புரியவில்லை. இருவருமாகவே யோசித்துப் பார்ப்போமே.

உனது நேச
ராஜாத்தி.

நந்தனர் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
திருவல்லிக்கேணி, சென்னை.

நியாய உணர்ச்சி

[தத்துவ விசாரணையில் மேனாட்டு ஆசிரியர்களின் போக்கு ஒரு விதமானது. கிழக்கு நாட்டு வேதாந்திகளின் கொள்கைகளும் உபதேசங்களும் நமது உதிரத்தோடு ஓடிக்கொண் டிருக்கின்றன. மேனாட்டுச் சாஸ்திரிகளின் அறிவோட்டத்தையும் நாம் கொஞ்சம் கவனிக்கவேண்டும். உதாரணமாக வால்டேர் என்ற மேனாட்டு அறிஞர் எழுதியுள்ள 'அவிவேக ஞானி' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை அடியிற் காட்டுகின்றோம்.]

நியாய உணர்ச்சி என்பது மனிதனுக்கு இயற்கையான உணர்ச்சி என்று எனக்குத் தோன்றுகிறது. உலகில் எல்லா நாடுகளிலும் இவ்வுணர்ச்சி உண்டு. ராஜரீகச் சட்டங்கள் எவ்வாறிருப்பினும் நியாய உணர்ச்சி என்பது எங்கும் இருந்தே தீருகிறது. எந்தக் கட்டுப்பாட்டுக்கும், எந்த மதக் கோட்பாட்டுக்கும் அடங்காதது நியாய உணர்ச்சி.

ஒரு துருக்கியனுக்கோ, பாரஸீகனுக்கோ, மலையாளிக்கோ ஊண் உடையி னிமித்தம் நான் கொஞ்சம் பணம் கடன் கொடுத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். நான் அதைத் திரும்பக் கேட்டால், "மகம்மது நபி நாயகம் உத்தரவு செய்யட்டும், அல்லது ஜாரதுஷ்டிரர் உத்தரவு கிடைக்கட்டும், அல்லது தலையிலெழுதிய பிரும்மா சொல்லட்டும், அப்போது தருகிறேன்" என்று ஒருவனாவது சொல்லமாட்டான். எனக்குத் தரவேண்டியதை அவன் ஒத்துக்கொள்வான். அவனால் அவ்வாறு கொடுக்க முடியாது போனால் அவனது வறுமையோ, பேராசையோ நியாய உணர்ச்சியைக் கவிந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். தனது தாய் தந்தையருக்குச் சாப்பாடு போடுவதற்குச் சக்தி யிருக்குமானால் எந்த மனிதனும் மறுக்கமாட்டான். அவ்வாறு மறுப்பது நியாயமென்றோ, சரியானதென்றோ, நியதியென்றோ, யோக்கியமென்றோ எவனும் வாதிடமாட்டான்.

மூட பக்தியுடைய மக்கள்கூட அநியாய உணர்ச்சி கொள்வதுதான் சரியானதென்று சொல்கிறார்களில்லை.

நியாய உணர்ச்சி என்பது முதல் தரமான சத்தியமாகும். அதை உலகம் முழுவதும் ஆதரித்திருக்கிறது. ஸமூகத்தை நாசமாக்கிய பெருங்கொலைகள்கூட ஏதோ சில "நியாய உணர்ச்சி" களின் கூற்றாக ஏற்பட்டனவேயன்றி வேறல்ல. உலகின் கொடுமைச் செய்கைகளி லெல்லாம் கொடியதாயும், நாசம் விளைவிப்பதில் முதல் தரமானதாயும், இயற்கையின் ரீதியை மாறியதாயும் உள்ளது ஒன்றுண்டு. அதுதான் யுத்தம்! ஆனால் அந்த யுத்தத்தை—நாசத்தை—விளைவிப்பவன்கூட 'நியாய உணர்ச்சி'யினால் செய்வதாகவே சொல்கின்றான். எவ்வளவோ யுத்தங்களை நியாயமானவை என்று மதாசாரியர்களும் சொல்லிப் போயிருக்கின்றனர் அல்லவா?

பெரிய தீவட்டிக் கொள்ளைக்காரன் தனது சேனையோடு கொள்ளையடிக்கப் புகும்போது குலதெய்வத்தின் பேரால் நியாயங் கூறித் தொடங்குகின்றான்.

சில்லரைத் திருடர்கள் சேர்ந்து கொள்ளையடிக்கும்போது "அங்கே போய்த் திருடுவோம். அந்த விதவையை நாசமாக்குவோம். அந்தக் குழந்தையை அனாதையாக்குவோம்" என்று சொல்லிக்கொண்டு புறப்படுகிறார்களில்லை. சிலர் "நாம் நியாயத்தோடிருக்க வேண்டும். நம்முடைய செல்வமெல்லாம் பணக்காரன் கையில் சிக்கிக்கொண் டிருக்கிறது. நம்மை ஏமாற்றி அவர்கள் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அதைப் பறித்துக் கொண்டு வருவோம்" என்று நினைத்துப் புறப்படுகிறார்கள். அவர்களுடைய அகராதியில் அது 'நியாயம்' ஆகிறது.

இத்தனை வர்ணத்தோடு, அவ்வப்போது தோன்றினாலும் 'நியாய உணர்ச்சி' என்பது அனாதி காலம் தொட்டு மனித ஜாதியில் புகுந்துள்ள ஓர் சத்தியம்; ஓர் சக்தி.

மகாத்மா காந்தி எழுதிய

ஆரோக்கிய வழி

விலை அணா 4

நட்சத்திரக் குழந்தைகள்

பி. எஸ். ராமையா

" அப்பா! நட்சத்திரங்களுக்குக் கூட அப்பா உண்டோ?"

" உண்டு அம்மா !"

" அவர் யார், அப்பா ?"

" ஸ்வாமி."

" ஸ்வாமியா ? அப்பா ! அவர்கூட உன்னைப்போலத்தானே இருப்பார்? நட்சத்திரம் ரொம்ப அழகா யிருக்கே. அவா அப்பா கூட அழகாகத்தானே இருப்பார் ?"

"ஆமாம், அம்மா ! ஸ்வாமியினுடைய அழகைப்போல வேறு யாருக்கும் அழகு கிடையாது."

" ஸ்வாமி கூட உன்னைப்போல நல்லவர் தானே ?"

" ஆமாம்."

" ஆமாம்; எனக்குக்கூடத் தெரிய றது. ஸ்வாமி ரொம்ப...........ரொம்ப நல்லவர். நட்சத்திரமே பளிச்சின்னு அவ்வளவு நன்னா யிருக்கே. அவா அப்பா எப்படி யிருப்பார் !"

" அவர் ரொம்ப நல்லவர். நம்மை யெல்லாம்விடப் பெரியவர்."

" அப்பா ! நட்சத்திரம் எப்போ பிறக்கும்?"

" ஸாயங்காலத்தில்."

" எப்படியப்பா அது பிறக்கிறது?"

" நாம் ஸத்தியத்தையே பேசுவதால்; நாம் ஒவ்வொரு தடவையும் ஓர் உண்மையைச் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது."

" நான்கூட நிஜத்தையே சொன்னால் நட்சத்திரம் பிறக்குமா அப்பா ?"

" ஆமாம் அம்மா! நீ ஒவ்வொரு தடவையும் நிஜம் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது."

" அப்பா !"

" என்ன அம்மா !"

" நம் ஊருலே அவ்வளவு பேரும்—குழந்தைகள் எல்லாம்—நிஜத்தையே பேசினா எவ்வளவு நட்சத்திரம் பிறக்கும் ! நிறைய (இரண்டு கைகளையும் விரித்துக் காட்டி) இவ்வளவு நட்சத்திரம் பிறக்குமோல்லியோ ?"

" ஆமாம் அம்மா !"

அதைக் கேட்டவுடன் குழந்தை ரோஹிணி வேறொன்றும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவளாய்த் திரும்பிவிட்டாள். அவளுடைய முதிரா உள்ளத்தினுள்ளே ஸ்வாமியைப் பற்றியும், அவருடைய நட்சத்திரக் குழந்தைகளின் அழகைப் பற்றியும் மனிதர்கள் யாவரும் ஸத்தியத்தையே பேசுவதைப் பற்றியும் கற்பனை செய்து காண முயன்றுகொண்டே வாசலுக்குச் சென்றாள்.

* * *

குழந்தை ரோஹிணிக்கு ஆறு வயஸுதான் ஆகிறது. ஆனாலும் அவளுடைய வார்த்தைகள் யாவும் மணி மணியாக இருக்கும். முத்தும் பவளமும் கோத்த ஹாரம் போல இருக்கும் அவளது பேச்சு. அவளுடைய கேள்விகள் எல்லாம் தெய்வ உலகத்துக் கேள்விகள்; அவளுடைய இளம் நெஞ்சில் உதிப்பவை ஸ்வர்க்க உலகத்து எண்ணங்கள்.

ஸ்ரீமான் ஸோமஸுந்தரம் பி. ஏ. வரையில் படித்திருக்கிறார். ஆனாலும் கூடக் குழந்தை ரோஹிணியின் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒவ்வொரு சமயம் திணறிப்போய் விடுவார். "ஐயோ ! இந்தக் குழந்தையின் மனத்தைக்கூட என்னால் திருப்தி செய்யக்கூட வில்லையே" என்று ஏங்கி நிற்பார். ஆனால் ரோஹிணியைக் கண்டவுடன்—ரோஹிணியைப்பற்றி நினைத்தவுடன்--அவருடைய உள்ளத்தில் எழும் கர்வம் ஒரு சக்ரவர்த்திக்குக்கூட இராது.

* * *

மாலை நேரம் வந்தது. குழந்தை ரோஹிணி அப்பொழுதுதான் குளித்து விட்டு, அம்மா செய்துவிட்ட அலங்காரங்களுடன் வாசலில் வந்தாள். அவர்கள் வீட்டு வாசலில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வாதா மரங்கள் உண்டு. அவற்றின் நடுவில் சென்று நின்றாள். ஸூர்யன் அஸ்தமிக்கும் சமயம்; வான வீதியில் வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகை செய்து கொண்டிருந்தன. குழந்தை ரோஹிணி மேற்றிசைக் கோடியில் நடந்து கொண்டிருந்த இந்திர ஜாலத்தைக் கண்டாள். அவளுடைய நிஷ்களங்க நெஞ்சத்தில் பரவசநிலை பிறந்தது.

" அவள் யார் ? வானத்திலே அப்படிப் படம் எழுதி விளையாடும் அந்த வானுலக ரோஹிணி எப்படி யிருப்பாள் ?"

குழந்தை ரோஹிணி பலகையில் சித்திரம் எழுதி விளையாடுவதுண்டு. முதலில் ஒரு படம் வரைவாள். " சீ ! இது நன்றாயில்லை " என்று அதை அழித்து விட்டு, வேறு ஒன்று எழுதுவாள். அது நன்றாக இருக்கும். ஆனாலும் அதைக் கலைத்து விட்டு வேறு ஒன்று எழுதுவாள். அதையும் துடைத்து விட்டுப் புதிய தினுஸாக மற்றொன்று வரைவாள்.

வானத்து ரோஹிணியும் அதைப் போலவே புதியபுதிய படங்களை எழுதுகிறாள். ஆனால் அவள் அழித்து அழித்து வரையவில்லை; மாற்றுகிறாள். எல்லாம் வர்ணப்படங்கள் ! புதியபுதிய வர்ணங்கள். ஒன்றைப் போல் மற்றொன்றில்லை. கணந்தோறும் நவ நவமாங் களிப்புத் தோன்றுகிறது. அந்த வானுலக ரோஹிணிக்கு எவ்வளவு ஸந்தோஷமாக இருக்கும் ! குழந்தை ரோஹிணிக்கும் ஸந்தோஷந்தான், வானுலக ரோஹிணியின் ஸந்தோஷத்தைப்பற்றி நினைப்பதில்.

* * *

" அம்மா ! ஸ்வாமிக்கு ஒரு நட்சத்திரக் குழந்தை பிறந்து விட்டது !" என்று கூவினாள் குழந்தை ரோஹிணி. கைகளைக் கொட்டுகிறாள். அவளது கண்கள் சிரிக்கின்றன; உள்ளம் களிவெறி கொள்கிறது.

அவளுடைய தாய் வீட்டு வாசற்படியின் அருகில் நிற்கிறாள். அவளது கவனம் வீதியில் போவோர் வருவோர் மீது சென்று லயித்திருக்கிறது. அதோ போகும் பெண்ணினுடைய ஆடையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். குழந்தை ரோஹிணியின் வார்த்தைகள் அவளுடைய செவிகளில் படவில்லை. ஆனால் குழந்தையின் ஸந்தோஷம் மாத்திரம் அவளுடைய

மனத்தில் சென்று தாக்கி அதை ரோஹிணியினிடம் இழுத்துச் செல்லுகிறது. குழந்தையை அப்படியே விழுங்க விரும்புவளைப்போலக் கரை புரண்டோடும் ஆசையுடன் அம்மாவின் கண்கள் குழந்தையைப் பார்க்கின்றன.

வானவெளியிலே இருள் பரவுகிறது. இருளும் அழகாகத்தான் இருக்கிறது. அதிலும் இனிமை இருக்கிறது. மாதாவின் ஸ்நேகத்தைப் போன்ற இனிமை. ஒன்றன்பின் ஒன்றாக நட்சத்திரங்கள் பிறந்து கொண்டேயிருக்கின்றன. அப்பா! எத்தனை நட்சத்திரங்கள்! குழந்தை ரோஹிணியால் அவற்றை எண்ண முடியவில்லை. அவை பிறக்கும் வேகந்தான் என்ன! அந்த வேகத்தைக் குழந்தையின் சிறிய மனம் தொடர்ந்து செல்வது ஸாத்யமில்லை.

"வா, கண்ணே! உள்ளே போகலாம். இருட்டிப்போய் விட்டது" என்று அம்மா அழைக்கிறாள்.

"இரு அம்மா போகலாம். மானத்தைப் பாரு. எவ்வளவு அழகாயிருக்கிறது!" என்று நிற்கச் சொல்லுகிறாள் குழந்தை.

"ஆமாம்; அழகாய்த்தானிருக்கிறது. இருட்டிப்போய் விட்டதே. இனிமேல் இப்படி வாசலில் நிற்கக்கூடாது. வா அம்மா உள்ளே" என்று மறுபடி அழைத்தாள் அம்மா.

"அம்மா!"

"உம்"

"மானம் இப்போ எதைப்போல் இருக்கு, சொல்லட்டுமா?"

"சொல்லு."

"உன் முகத்தைப்போல். நீ என்னை முத்தமிடுகிறயே; அப்போ உன் முகம் இந்த மானத்தைப் போலவே இருக்கு"

அம்மாவுக்கு அதன்பொருள் விளங்கவில்லை. அது சரியென்று தோன்றவில்லை. ஆனால் அந்த வார்த்தைகளில் இருக்கும் ஏதோ ஒன்று 'அது வாஸ்தவந்தான்' என்று சொல்லியது அவளுடைய மனத்தில்.

அம்மா சட்டென்று கீழிறங்கிச் சென்று குழந்தையை இழுத்துக் கட்டி யடங்காத காதலுடன் முத்தமிட்டாள். அம்மாவுக்கு வீட்டில் வேலையிருக்கிறது. மற்றொருமுறை, "உள்ளே வாடா குஞ்சு" என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்றுவிட்டாள்.

வெளியே சென்றிருந்த ஸோமஸுந்தரம் வீட்டிற்குத் திரும்பி வந்தார்; வாசலில் தனியாக வானத்தின் அழகில் லயித்து நின்ற ரோஹிணியைக் கண்டார்.

"ரோஹிணிக் குஞ்சு! என்ன அம்மா பார்க்கிறாய்? உள்ளே போகலாம் வா" என்று அழைத்தார்.

குழந்தை, "இரு அப்பா! அந்த மானம் எவ்வளவு அழகாயிருக்கிறது! அவ்வளவு குழந்தைகளையுடைய ஸ்வாமிக்கு எவ்வளவு ஸந்தோஷம் இருக்கும்! அப்பா!" என்றாள்.

அதற்குள் ஸோமஸுந்தரத்தின் மனத்தில் வேறு ஏதோ சிந்தனை வந்துவிட்டது. குழந்தை சொல்லியது சரியாகக் கூடக் காதில் விழவில்லை. "உம்" என்று சொல்லிவிட்டு, வீட்டிற்குள் சென்றார்.

அடுத்த விநாடி ஒரு விண்மீன் நிலை தவறிச் சுடர் வீசிக்கொண்டு வானத்தினின்றும் கீழே விழுந்து மறைந்தது. அதன் பிரயாணம் சில விநாடிகளே கண்ணுக்குத் தெரிந்தது.

குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகியது. இரண்டு கண்களினின்றும் இரண்டு நீர் வடிவமான முத்துக்கள் கீழே உதிர்ந்தன. அந்தச் சின்னஞ்சிறு ஹ்ருதயத்தில் விரிக்க இயலாத—சுருக்கென்று தைக்கும்—ஒரு வேதனை காணுகின்றது. குழந்தை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அழுகையினிடையில், "அப்பா!" என்று இரும்பை உருக்கும் குரலில் கூப்பிட்டுக் கொண்டே வீட்டினுள் சென்றாள்.

ஸோமஸுந்தரம் அப்பொழுதுதான் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து அருகிலிருந்த மேஜையின் மீதிருந்து ஒரு புஸ்தகத்தைக் கையில் எடுத்தார். குழந்தையின் குரலைக் கேட்டவுடன் அவருடைய கையினின்றும் புஸ்தகம் 'தொப்' பென்று கீழே விழுந்தது. அவருடைய ஹ்ருதயம் ஆயிரம் சுக்கல்களாகச் சிதறி விழுந்தது போலிருந்தது. உடல் பதைத்தது.

'என்னடா கண்ணே! என் ராஜாத்தியல்லவா! என் ரோஹிணிக் குஞ்சை யார் என்ன செய்தார்கள்" என்று படபடப்புடன் கேட்டுக் கொண்டே குழந்தையை வாரித் தூக்கித் தோளின் மேல் சாத்திக்கொண்டார்.

"அப்பா! எனக்குத் தெரிஞ்சு போச்சு!" என்று விக்கல்களுக்கும் விம்மல்களுக்கும் இடையே சொன்னாள் குழந்தை.

"என்னடா கண்ணே தெரிஞ்சு போச்சு?"

"அப்பா! நம்ப ஊரிலே யாரோ ஒரு பொய் சொல்லிவிட்டா, அப்பா!"

விக்கல்கள். விம்மல்கள். ஹூங்காரத்துடன் அழுகை.

"ஏன் அம்மா அப்படித் தோன்றுகிறது உனக்கு?"

"நீதானே அப்பா சொன்னே: நாம் ஒரு நிஜம் சொன்னால் ஒரு நட்சத்திரம் பிறக்கிறதுன்னு. அப்போ...... ஒரு நட்சத்திரம்........கீழே விழுந்தா.... யாரோ ஒரு பொய்.......சொல்லிட்டான்னு தானே....அர்த்தம்? ஸ்வாமியினுடைய.... ....மனஸு...இப்போ..... எப்படி இருக்கும் அப்பா?........ எனக்கே....நிறைய....அழ வரதே......" என்று சொல்லிவிட்டு அழத் தொடங்கினாள் அந்தக் கபடமற்ற குழந்தை.

அந்தப் பச்சை உள்ளத்தில் எழுந்த துக்கத்தையும் அதன் துன்பத்தையும் நாவின் மொழிகளால் விவரிப்பது இயலாத காரியம். அது ஹ்ருதயத்தினோடு ஹ்ருதயம் தனது சொந்த பாஷையில் உணர்விக்க வேண்டிய புனிதமான ஒரு துக்கம். —(கலைமகள்.)

வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின்

காதல்

முதலிய கதைகள்

விலை அணா 8

நவஜீவன் :—இந்தியாவில் தயாரிக்கப்படும் டானிக்குகளில் நவஜீவன் மிகச் சிறந்தது. 1 புட்டி விலை ரூ. 2 தான். சாஸ்த்ரீக முறையில் எல்லா வியாதிகளுக்கும் மருந்து தயாரிக்கப்படுகின்றது.

பிருங்காமலக தைலம் :—மிகவும் குளிர்ச்சியைத் தரக்கூடியதும், மயிரைக் கருக்கவும் வளரவும் செய்யக்கூடிய மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த தைலம். 1 புட்டி விலை ரூ. 1. ஒரே புட்டியில் குணம் தெரியும்.

தென் இந்தியா பார்மகியூடிகல்ஸ், (லிமிடெட்.,) நெ. 60, லிங்கச்செட்டித் தெருவு, சென்னை.

தங்கள் ஜாதகம் ("மாயா" எழுதியது)

ஏதோ கொஞ்சம் வரும், ஜோஸ்யம், எனக்கு. அதாவது எனக்கு ஏதோ கொஞ்சம் ஜோஸ்யம் வரும். எனவே, லௌகிகம் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டுமென்பதில் ஆட்சேபனையே யில்லை. இந்தக் காலத்தில் ஜோஸ்யத்துக்குத்தான் வரவர மதிப்புக்குறைந்து வருகிறதே. கலிகாலம்! இருந்தாலும், அதற்காக இந்த அருமையான சாஸ்திரத்தைப் பறிகொடுத்துவிடலாகாது என்பதற்காக, தன்னலம் கருதாது உழைத்துவரும் பெரியோர்களுள் சிறியேனும் ஒருவன். வழக்கப்போல, எனது ஜோஸ்யத் திறமையை முதன் முதலில் தங்களுக்கு நானும் பரீட்சை கொடுத்துத் தானாகவேண்டும் என்பது எனக்குத் தெரியாமலில்லை. இப்பொழுது ஒரு ஆரூடம் சொல்லுகிறேன், பாருங்கள். நீங்கள் எங்கேயோ இருக்கிறீர்கள்; நான் எங்கேயோ இருக்கிறேன். மந்திரமில்லை; மாயமில்லை. ஆகவே, என்னுடைய இந்தச் சிறிய ஆரூடம் சரியாயிருந்தால் என்னுடைய ஜோஸ்யத் திறமையை நீங்கள் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உங்களுக்கு விளங்கி யிருக்குமென நம்புகிறேன். இனி என்னுடைய ஆரூடத்தைத் தெரிவிக்கிறேன்; அதாவது இப்பொழுது தாங்கள் அடியேனுடைய இந்தத் திவ்யமான வியாசத்தைப் படனம் செய்துகொண் டிருக்கிறீர்கள். எனது ஆரூடம் ஒரு நாளும் பிழைக்காமல் பலிக்கும் என்பதற்கு இந்த ஒரு உதாரணமே போதாதா? இன்னொன்று சொல்லவேண்டும் என்று ஆசையாய்க் கேட்கிறீர்களல்லவா? சரி; தங்களுக்குத் தமிழ் படிக்கத் தெரியும். இதுவும் சரிதான். என்றாலும், மூக்காலே மூன்றுவாட்டி பார்க்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள். இப்பொழுது தங்கள் மனத்திலிருக்கும் எண்ணத்தைச் சொல்லட்டுமா? "ஏதோ இந்த மாயா நம்மை ஏமாற்றுகிறான்" என்பதே உங்கள் எண்ணம். திருப்தியாயிற்றல்லவா? இனி என்னுடைய பெரிய ஜோஸ்யங்களை ஆட்சேபனையில்லாமல் கேட்பீர்களென்று நம்புகின்றேன்.

வாசக நண்பரே, தாங்கள் என்னவோ நினைத்து விடவேண்டாம். நான் ஜக்கம்மாதேவி உபாசனையால்தான் இதையெல்லாம் சொல்லிவிடுவதாக நினைத்துவிட வேண்டாம். தங்களுடைய ஜாதகமும், இன்னும் இவ்வுலகத்தில் வசிக்கும் சகலமானவருடைய ஜாதகமும், அடியேன் கைவசமிருக்கின்றன. அவை வம்சபரம்பரையாக எங்கள் குடும்பத்திற்குக் கிடைத்த, ஒரு மகான் தயாரித்த, ஜாதகக்கட்டில் இருந்துகொண் டிருக்கின்றன. தங்கள் ஜாதகத்தைப் பார்த்தமட்டில் எனக்குத் தோன்றிய சில பெரிய பலாபலன்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(1) தாங்கள் இதுவரையில் எங்கேயாவது ஆரூடமோ ஜோஸ்யமோ கேட்டிருந்தால், அதில் சொல்லப்பட்ட பலன்களெல்லாம் வெறும் ஏமாற்றும் பொய்யுமா யிருந்திருக்கவேண்டும். இதை மறுக்காமல் ஒப்புக்கொள்ளுவீர்களென்று நம்புகிறேன். மறுப்பீர்களானால், அதற்கு நான் ஜவாப்தாரியல்ல; எனக்குக் கிடைத்த தங்கள் ஜாதகம்தான் அப்படிச் சொல்லுகிறது.

(2) தங்களுக்குக் கூடிய சீக்கிரம் ஒரு புதையல் கிடைக்கப் போகிறது. "எங்கே, எப்பொழுது" என்று அவசரப்படுகிறீர்களே! நாவில் ஜலம் ஊறுகிறதே! கொஞ்சம் சாவதானமாகவே யிருங்கள். உங்களுக்குப் புதையல் அகப்படப்போவது என்னவோ நிச்சயம். ஆனால், ஜாதகம் சொல்லுகிறபடி நீங்கள் நடக்கவேண்டும் ஒரு அண்டா நிறையப் பணத்தை நிரப்பி உடனே உங்கள் வீட்டுக் கொல்லையில் புதைத்து வைத்து, மூன்றுநாள் பூசை செய்யுங்கள். எங்கே புதைத்துவைக்கப் போகிறீர்கள் என்பதற்கு ஒரு 'பிளான்' தயாரித்து அதை முதல் நாளே பத்திரிகைகளில் பிரசுரம் செய்தல் நலம். நான்காம் நாள் புதைத்த இடத்தைக் கல்லிப் பார்த்தீர்களானால், வேறு எவருக்கும் அதிர்ஷ்டம் அடிக்காம லிருக்குமாயின், உங்களுக்கே அந்தப் புதையல் கிடைக்கும்; இதில் சந்தேகமே வேண்டாம்.

(3) இன்னொரு அதிசயமான லாபம் இருக்கிறது. ரூ. 25—4—3 ஏதோ அனாமத்து வரவு ஒன்று தங்களுக்குக் கூடிய சீக்கிரம் ஏற்படப் போவதாகத் தெரிகிறது. இந்தத் தொகை இந்த நிமிஷத்தில் தங்கள் ஹஸ்தம் எங்கேயிருக்கிறதென்று திறுக்குத் திறுக்கென்று பார்த்துக்கொண்டு எங்கோ ஒரு மூலையில் வருந்திக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதை உடனே பெறுவதற்கு மார்க்கமென்னவென்று ஆத்திரமாய்க் கேட்கிறீர்கள். சொல்லுகிறேன்; சொல்லத்தானே, உங்கள் ஜாதகத்தைக் கையில் எடுத்தேன். கவனமாய்க் கேளுங்கள். 4 x 2 x 3 x 2 x 5 x 4 x 3 இந்தப் பெருக்கலைப் போடுங்கள். விடை 2,880 என்கிறீர்கள். ஆமாம், அதுதான் விடை; தங்கள் ஜாதகமும் அப்படித்தான் சொல்லுகிறது. இப்பொழுது நீங்கள் என்ன செய்யவேண்டுமென்றால், 2,880 அரையே அரைக்கால் ரூபாய்கள் தயார் செய்யவேண்டும். இவற்றை 2,880 க்குமேல்படாத விடைகளுள்ள போட்டிப் பந்தயம் ஏதாவது கவனமாகப் பார்த்து, அதில் செலுத்திவிட வேண்டும். அப்படிச் செய்தீர்களானால், தங்களுக்கு நான் மேலே குறிப்பிட்ட தொகை கிடைக்கும். ஆனால், இதில் ஏதாவது ஒரு சிறு தவறு செய்துவிட்டீர்களானாலும், அந்த 25 ரூபாய் சொச்சமும் முன்போலவே தங்களிடம் வருவதற்கு வழிதெரியாமல் தவித்துக்கொண்டேதா னிருக்குமென்று தங்கள் ஜாதகம் திட்டமாய்த் தெரிவிக்கின்றது.

இன்னும் இவற்றைவிடத் தங்களுக்கு அதிக இனிப் பளிக்கக்கூடிய அநேக பலன்கள் இருக்கின்றன. ஒரே சமயத்தில் சொன்னால் தெவிட்டிப்போமென்று தோன்றுகிறபடியால்—இல்லையில்லை, தங்கள் ஜாதகம் சொல்லுகிறபடியால்—இன்னொரு சமயம், தங்களுக்கும் விருப்பமா யிருந்தால், தெரிவிக்கத் தயாராய்க் காத்துக்கொண் டிருக்கிறேன். என்னுடைய ஜோஸ்யத்தின்படி ஏதாவது லாபம் கிடைத்தால், ஏதோ ஒரு ஐந்து ரூபாய் மணியார்டர் மூலம் சன்மானம் செய்வீர்களாயின், சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறேன். நஷ்டம் வருமானால், பூராவும் தாங்களே அனுபவித்துக்கொள்ள, என்னுடைய பூரண சம்மதத்தையும் பணிவுடன் தங்களுக்குத் தந்துவிட்டேன் என்பதையும் அறிவீர்களாக.

நிலமகள் குலுங்குகிறாள்

'உன் கை எவ்வளவு நீளம் அளக்கிறேன்' என்று தையற்காரன் கஜக்கோலை எடுத்தால் அதைத்தட்டி விடுவாருண்டோ? இந்தப் பூமாதேவியின் புத்தியும் அவ்வாறிருக்கிறது. கல்கத்தாவில் பூமி குலுங்குவதின் அளவைக் கணக்கிட வேண்டுமென்பதற்காக, ஓர் யந்திரத்தை வைத்தார்களாம். அந்த யந்திரத்தையே தூக்கி யடித்துவிட்டது பூகம்பம். என்ன அநியாயம்! பூமிக்கு மூளையே யில்லை. உள்ளே சுத்தக் களிமண் தானென்பது நிச்சயம், நிச்சயம்.

* * *

"வீடுபோச்சு, வாசல் போச்சு, மாமன் போய்ட்டான்" என்று பூகம்பத்தினால் பீஹாரிலும்வங்காளத்திலும் அநேகர் ஓலமிடுகின்றனர். இந்த சமயத்தில் ஒரு பேர்வழியின் அனுபவம் தான் ருசிகரமா யிருந்திருக்கவேண்டும். கல்கத்தாவில் ஒரு லாக்கப்பில் அடைக்கப்பட்டிருந்த கைதி சுற்றிலும் ஏற்பட்டிருந்த கலாட்டாவில் திடீரென்று எங்கேயோ மறைந்து ஸ்வதந்திரமாகச் சிறிதுநேரம் வாழ்ந்துவிட்டுப் பிறகு மறுபடியும் கைதியாக ஆஜரானானாம்.

* * *

"ஆ! என்னே ஹிமயமலையின் காட்சி! வெள்ளிபோன்ற பனித்தகடுகள். விந்தை வர்ணமுடைய மேகக் கூட்டங்கள்! ...." போதுமையா உமது வர்ணனை. இந்த ஹிமயமலைதான் இப்போது பூகம்பத்தை உண்டாக்கி விட்டதாகச் சீமையிலிருந்து ஒரு நிபுணர் அறிவிக்கின்றார். அந்த மலையினின்று ஏதோ ஓர் புதியகுன்று ஏற்படுவதற்குப் பிரயத்தனம் நடக்கிறதாம். அதன் பயனாக அருகிலுள்ள பிரதேசமெல்லாம் குலுங்குகிறது. இந்தச் சனியனான மலையை இன்னும் ஒரு வாரத்துக்கு எவரும் புகழக்கூடாது என்பது எனது உத்தரவு.

* * *

புரொபஸர் கிருஷ்ணன் என்பவர் பிரும்மபுத்திரா நதியின்மீது பாய்ந்திருக்கிறார். அவருக்கு அந்த நதியின் மீது ஆத்திரம். அதில் வரும் குப்பையும்கூளமும் அளவுக்குமிஞ்சிப்போய்க் கீழே அழுத்துகின்றதாம். அதன் காரணத்தினால் அஸ்ஸாம் பிரதேசத்தில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுகிறதாம். இந்த இமயமலையையும், பிரும்மபுத்திரா நதியையும் அப்புறப்படுத்த யாராவது ஓர் மகான் தோன்றலாகாதா வென்று சிலர் பெருமூச் செறிகின்றனர்.

* * *

ஆதிகாலத்தில் மகா பாரத யுத்தம் ஆரம்பித்த நாளில் எந்த 7 கிரகங்கள் ஒன்று சேர்ந்திருந்தனவோ அந்த 7 கிரகங்களும் 15-1-34-ல் ஒன்று சேர்ந்ததால் உலகில் உத்பாதங்கள் ஏற்படுமென்று நினைத்து அந்தப் பாபசாந்திக்காக மூன்று நாள் யாகமொன்றை மூல்டான் வாசிகள் நடத்தினார்கள். யார் செய்த புண்ணியமோ பூகம்பத்தோடு இந்தியா தப்பித்துக்கொண்டது. இந்த மாதிரி கிரகங்கள் சேரும் காலத்து பூமியில் கோளாறுகளோ, அல்லது சமுத்திரம் பொங்குதலோ ஏற்படுமென்று நவீன ஆராய்ச்சிக்காரர்களும் சொல்கின்றனர்.

* * *

"முன்னாலேயே தெரிந்திருந்தால் மாடி வீடு கட்டியிருக்கமாட்டேனே!" என்று பலர் வடநாட்டில் அழுகின்றார்கள். பூகம்பத்தால் அநேக மாளிகைகள் இடிந்துவிட்டன. ஆனால் குடிசைகளும் சிறு வீடுகளும் யாதொரு நஷ்டமுமின்றித் தப்பின. 'தெரியாமலா ஆதிகாலத்தில் பர்ண சாலைகள் கட்டினார்கள்?' என்று எங்க தாத்தா சொல்கின்றார்.

* * *

"பூகம்பம் ஏற்படுவதற்குச் சில நிமிஷங்களுக்குமுன் வீடுகளிலிருந்த எலிகளும் பெருச்சாளிகளும் எப்படியோ முன்னதாகவே அபாயத்தை அறிந்துகொண்டு தெருவில் ஓட ஆரம்பித்தன" என்று லட்சுமணபுரியினின்று வந்த தந்தியில் காணப்படுகின்றது. பெருச்சாளிகளும் எலிகளும் பற்றற்ற துறவிகள். மனிதரால் தங்கள் வீடு வாசல்களைத் துறக்க லேசில் முடிகிறதா? கடைசியில் வெளியே ஓடிய துறவிகள் உயிர் தப்பினார்கள். பற்றுடைய மனித வர்க்கத்தின்மீது வீடுகள் இடிந்து விழவே மாண்டார்கள். ஐயோ பாவம்!

உலகப் பிரசித்திப் பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,
பட்டணம் பொடி
காரம், மணம், குணம், நிறம், முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால்
அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.
ஆ. அப்பாதுரை முதலியார்
அண்டு ஸன்,
புகையிலைக் கமிஷன் ஏஜண்டுகள், அண்டு
மூக்குத்தூள் வியாபாரிகள்.
39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

விலை அணா இரண்டே! முந்துங்கள்!!
ஸ்ரீமான் S. G. கிட்டப்பாவின்
சரித்திரம்
காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திரம் வெளிவந்துவிட்டது. 53 பக்கங்களும் 5 அழகிய படங்களையும் உடையது. ஸ்ரீ கிட்டப்பாவினிடம் நெருங்கிப் பழகிய தேசபக்தர் ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியரால் எழுதப் பெற்றது.
சங்கு ஏஜெண்டுகளுக்கு வியாபாரத்திற்காக ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும், மாதிரிக் காப்பிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.
விலாசம்:—
ஆக்கூர், அனந்தாச்சாரி,
ஆரிமுத்து ஆசாரி மேஸ்திரி தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னை.

மந்திர மகிமை
(பண்டித மதன்மோகன் மாளவியா எழுதியது)
விலை அணா 2.
இந்த அரிய நூலில் பண்டித மாளவியாஜீ, அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷரம் ஆகிய மந்திரங்களின் மகிமையை, வேத சாஸ்திர புராணேதிகாச ஆதாரங்களுடனும் பல மேற்கோள்களாலும் விளக்கி எழுதியிருக்கிறார். நேர்த்தியான தமிழ் மொழி பெயர்ப்பு. ஹிந்து மதாபிமானிகள் யாவரும் படித்துப் பயனடையவேண்டிய நூலாகும்.

தங்கக் களஞ்சியம்

[பெரியோர் வாழ்க்கை உலகின் ஆதர்சம். பெரியோர் வாழ்க்கைக் குறிப்புக்களின் சேர்க்கையே உலக சரித்திரம். ஆகவே நிலமகள் பெற்ற தங்கக் குழந்தைகளின் சரிதைகளினின்று சின்னஞ் சிறிய குறிப்புக்களை இந்தத் தலைப்பின் கீழ் வெளியிடுவதென்று 'சங்கு' நிச்சயித்திருக்கின்றது. எத்தனையோ பெரியார்களின் வாழ்க்கையைப் பற்றிச் 'சங்கின்' அன்பர்கள் அறிவீர்கள். கற்பனை கலக்காமல் அவைகளைக் குறித்து அனுப்புங்கள். சங்கு அவைகளை வெளியிடுவதற்குத் தயாராயுளது. —சங்கு. ஸுப்ரஹ்மணியன்.]

'முதுமையில் மண்!'

பாரதியார் ஒரு நாள் புதுச்சேரி வீதியில் சென்று கொண்டிருந்தபோது ஒரு சிறுவன் 'இளமையிற்கல்! இளமையிற்கல்!' என்று மனப் பாடம் செய்து கொண்டிருந்தான். உடனே பாரதியார் 'முதுமையில் மண்! முதுமையில் மண்!' என்று சிரித்துக் கொண்டே நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு நடந்தாராம். ஸ்ரீயுத வ. ரா. பாரதியாரின் இந்தக் கதையை எத்தனைதரம் சொன்னாலும் அலுப்பதில்லை.

'ஒட்டடா ரதத்தை'

யாரோ ஒரு கிழவி பாரதியாருக்காகக் கொழுக்கட்டையும் சுண்டலும் பண்ணி வைத்துக் கொண்டு ஒரு நாள் காத்திருந்தாள். அந்தி வேளையில் பாரதியார் உட்கார்ந்திருந்த 'புஷ், புஷ்' வண்டி வாசலில் வந்து நின்றது. கிழவி தான் தயாரித்து வைத்திருந்த தின்பண்டங்களைத் தந்தாள். பாரதியார் அவைகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். அவற்றின் சுவை அவரைப் பரவசமாக்கி விட்டது. "அமிர்தம்! அமிர்தம்! சரி, ஒட்டடா ரதத்தை" என்று கூறினாராம். மனதுக்குள் தம்மை ஏதோ ஓர் தேவனென்றும், அமர்ந்திருப்பது ரதமென்றும் கவிஞர் எண்ணிவிட்டார் போலும். பாரதி தாஸன் இந்தக் கதையை அடிக்கடி சொல்வதுண்டு.

ஆண்ட்ரூஸின் தந்தை

தீனபந்து ஆண்ட்ரூவின் தந்தை ஓர் வாழைப்பழத் தோலின்மீது சறுக்கி விழுந்து அதன் பயனாகப் படுத்த படுக்கையாகி, பிறகு மரணமும் அடைந்தாராம். இன்றைக்குங்கூடத் தெருவில் ஒரு வாழைப் பழத் தோலி கிடைப்பதை ஆண்ட்ரூஸ் கண்டாரானால், அதை எடுத்து அப்பா லெறிந்து விட்டுத்தான் அவர் போவது வழக்கம்.

பஜ்ஜி தின்று வாழ்ந்தார்

ஸ்ரீயுத அரவிந்தகோஷ் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு தடவை அவருக்கு இந்தியாவினின்று பணம் வரவில்லை. சில தினங்கள் பப்பர்மெண்டுகளையும், பஜ்ஜிகளையும் வாங்கித் தின்று சீமையில் அவர் படித்து வந்தாராம்.

ராஜனின் கழுதை சவாரி

தமிழ் நாட்டுத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ராஜன் சிறு வயதில் மகா விஷமியாம். அவர் விளையாட்டே ஒரு புதுத் தினிசு. திருச்சியினின்று ஸ்ரீரங்கத்துக்குப் போவதற்குத் தெருவில் அலையும் கழுதைகளி லொன்றைப் பிடித்து அதன் முதுகில் சவாரி செய்வது அவர் வழக்கமாய் இருந்ததாம்.

ஸிங்க்ளேரின் சிறு வயது

அப்டன் ஸிங்க்ளேர் அமெரிக்காவிலுள்ள ஒரு பிரபல ஆசிரியர். அவர் சிறு பையனாயிருந்தபோது, அவருக்கு ஒரு தடவை கக்குவான் இருமல் கண்டது. இதர சிறுவர்கள் அவரை அணுக வொட்டாமல் பெரியோர் தடுத்து விட்டார்களாம். தனியாய் வாழப் பிரியமின்றி, ஸிங்க்ளேர் கோபமடைந்து அடுத்த வீட்டுப் பையன்களையெல்லாம் கட்டிப் பிடித்து, அவர்கள் முகங்களுக்கு எதிரே பலமாக இருமி இருமி எல்லோருக்கும் இருமல் வருமாறு செய்து விட்டாராம். தமது அந்தக் காலச் சின்னப் புத்தியை அவர் இன்னமும் கண்டித்துக் கொண்டிருக்கிறார். தற்காலத்தில் 'முதலாளித்தனம்' என்ற நோய் உலகில் இவ்வாறுதான் பரவுவதாக, அவர் உதாரணம் கூறுவதுண்டு.

விளக்கெண்ணெய் வேலை

இத்தாலியில் முஸ்ஸோலினி ஸர்வாதிகாரியாக வருவதற்கு முன்னே, அவர் ஒரு கட்சித் தலைவராயிருந்தார். அக்காலத்தில் அவரை எதிர்த்தவர்களைத் தண்டிக்க, அவரது கட்சியார் செய்த தந்திரம் விசித்திரமானது; ஆனால் குரூரமானது. எதிரியைக் கைது செய்து, ஓர் அறையில் பூட்டிவைத்து விளக்கெண்ணெயை மேலும் மேலும் குடிக்கச் செய்வார்களாம். பசிக்கிறதென்று கைதி கூறினால், இன்னொரு புட்டி விளக்கெண்ணெய்தான் கிடைக்கும். இந்தத் தண்டனைக்கு எந்த எதிரியும் மசியவேண்டியதுதானே! "விளக்கெண்ணெய் தந்து நாட்டின் ராஜீயத்தை ஆரோக்கிய முடையதாக ஆக்கி விட்டேன்" என அவர் அடிக்கடி சொல்வதுண்டாம்.

ஆசிரிய மூளையின் வேகம்

மார்க் ட்வெயின் என்பார் ஹாஸ்ய ரஸம் மிகுந்த பத்திரிகாசிரியர். ஒருநாள் கடைக்காரச் சந்தாதார் ஒருவரிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. "இன்றைக்கு உங்கள் பத்திரிகையைத் தபாலில் வாங்கிப் பிரித்தவுடன் அதன் நடுவே நிறைய சிலந்தி வலை பின்னியிருப்பதையும் ஒட்டடை ஒட்டிக்கொண் டிருப்பதையும் கண்டேன். இது நல்லதிர்ஷ்டமா? அபசகுனமா?" என்று அந்த நண்பர் கேட்டிருந்தார். அதற்கு மார்க் ட்வெயின் விசித்திரமான பதிலை விடுத்தார்:—"நமது பத்திரிகையில் யார் யார் விளம்பரம் செய்கிறார்கள், யார் செய்யவில்லை என்பதை அந்தச் சிலந்தி ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தது. யார் விளம்பரம் செய்யாத வியாபாரியோ அவர்கள் கடைக்குப் போனால் கொஞ்சம் கூடக் கவலையின்றி, தான் வாழலாமென்பது சிலந்தியின் எண்ணம்."

"காலதாமதம் செய்து விட்டீர்கள்"

ஸ்ரீயுத அய்யர் சேரமாதேவி குருகுலத்தை வைத்திருந்தபோது ஒரு அன்பர் தமது குழந்தையைக் குருகுலத்தில் விட்டுப்போக வந்திருந்தார். "குழந்தைக்கு வயது மிகமிகக் குறைவு. ஆகவே, உங்களிஷ்டப்படி அவனை வளைத்து வளர்க்கலாம்" என்றாராம் அவர். "உங்கள் குழந்தைக்கு என்ன வயது?" என்று கேட்டாராம் அய்யர். "ஆறு" என்றாராம் அன்பர். "ஓ! காலதாமதம் செய்துவிட்டீர்கள். அவனுக்கென்று சில குணாதிசயங்கள் இதற்குள் ஏற்பட்டிருக்குமே" என்றாராம் அய்யர்.

கற்பனையூர் வழக்குகள்

நாற்காலி மாஜிஸ்திரேட் கச்சேரி ராவ்சாகேப் தாண்டவராயர் முன்பு— கலகம் செய்ததாக

நகர மாஜிஸ்திரேட் முன்பு இத்தனை வருஷங்களாக நடைபெறாத ஓர் அபூர்வ வழக்கு இன்று நடைபெற்றது. பெஞ்சு மாஜிஸ்திரேட் இதை நாற்காலி மாஜிஸ்திரேட் முன்பு நடத்தவேண்டும் என்று கூறிவிடவே, இது மேல் கோர்ட்டிலேயே நடத்தப்பட்டது.

குற்றவாளியைக் கொண்டுவந்து போலீஸ் வீரர்கள் நிறுத்தினர்கள். குற்றவாளி சின்னப் பையன். விளையாட்டுப் புத்தி மூஞ்சியில் அச்சடிக்கப்பட்டிருந்தது. அவன் கையில் பம்பரமும் கயிறும் வைத்துக் கொண்டிருந்தான்.

அவனைக் கைதிக் கூண்டில் ஏற்றுவதற்குமுன் அவன் கையிலிருந்த கயிற்றைப் போலீஸ் இனிஸ்பெக்டர் பிடுங்கிக் கொண்டார். இந்தப் பெரிய கைதி ஒரு வேளை அந்தக் கயிற்றால் தன்னைத் தூக்குப் போட்டுக்கொண்டு விட்டாரானல் வழக்கு நடைபெறாது போய் விடுமே என இனிஸ்பெக்டர் எண்ணினர் போலும்! பையன் கையிலிருந்த பம்பரத்தை ஹெட்கான்ஸ்டபிள் பிடுங்கிக்கொண்டான். இந்த அபாயகரமான குற்றவாளி ஒருவேளை பம்பரத்தை ஆயுதமாக உபயோகப்படுத்திக் கோர்ட்டில் யாரையாவது காயப்படுத்தி விட்டால் என்ன செய்வது என்பது அந்த ஹெட்டு மகராஜனின் எண்ணம் போலும்! பையனிடமிருந்து பறித்த பம்பரத்தையும் கயிற்றையும் ஓர் கான்ஸ்டபிள் வராந்தாவில் உபயோகப்படுத்திக் கொண்டிருந்ததைப் பொது ஜனங்கள் கவனித்தார்கள். நிற்க,

வழக்கு ஆரம்பமாயிற்று. பிராஸிக்யூஷன் தரப்பு வக்கீல் எழுந்திருந்தார். அவர் பெரிய முண்டாசுப் பேர்வழி. அல்பாகா கறுப்புச் சட்டைக்கு அதிகமாக மினுமினுவென்று அவர் முகம் இருந்தது. அவர் கைதியின் பக்கம் திரும்பும்போதெல்லாம் பையனின் கால்களும் கைகளும் டகடகவென்று தந்தியடித்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். அந்த வக்கீல் குற்றத்தை விவரித்தார்.

"கோர்ட்டாரவர்களே! எதிரே நிற்கும் பாலசுந்திரமுதலியார் குமாரன் கதிர்வேலு என்ற இந்தக் குற்றவாளி பலத்த குற்றஞ் செய்திருக்கின்றார். சென்ற செவ்வாய்க்கிழமை மாலை சந்தைப்பேட்டைத் தெருவில் இவர் செய்த அட்டூழியங்களுக்காகக் கைது செய்யப்பட்டு, இங்கு கொணரப்பட்டிருக்கிறார். கதிர்வேலு என்ற இந்த நபர் தமது வயதினரான நாலைந்து பேர்களோடு இருந்தாராம். ஏதோ அவர்களுக்குள் சச்சரவேற்பட்டு வளர்ந்ததாம். அதன் பயனாக ஆங்கிருந்த 'முன்ஸீப்', 'தலையாரி' முதலியவர்களை இந்தச் சிறுவர் காயப்படுத்தியதாகப் போலீஸ் இனிஸ்பெக்டரிடமே ஒப்புக் கொண் டிருக்கிறார்."

இதைச் சொல்லும்போது மாஜிஸ்திரேட் தாண்டவராய முதலியாரின் முகம் செவந்தது. "ஒரு முன்ஸீப்பை இந்தப் பையல் அடிக்கலாயிற்றா? ஓர் சர்க்கார் உத்யோகஸ்தனை இந்தப் பையல் விரல்போட விட்டுவைப்பதா? தலையாரியா யிருந்தா லென்ன, அவனும் சக்கிரவர்த்தியின் பிரதிநிதிதானே. அவனை இந்தச் சின்னப்பயல் தொடலாயிற்றா?" என்ற எண்ணங்கள் ஓடியது அவர் முகத்தினின்று தெரிந்தது. "சரி, அப்புறம்!" என்று கனைத்துக் கைதி யிருந்த பக்கம் திரும்பினர் மாஜிஸ்திரேட். 'அம்மா' வென்று கத்தினன் கைதி. கோர்ட்டுக்கு வந்திருந்த அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் பையனுக்குத் தேறுதல் கூறுவதில் சில நிமிஷங்கள் வியர்த்தமாயிற்று.

பிராஸிக்யூடிங் இனிஸ்பெக்டர் குற்றச்சாட்டுதலைத் தொடர்ந்து கூறத் தொடங்கினர்:—

"ஹூம்ஹூம் தன் கையிலிருந்த பம்பரத்தாலும் கயிற்றாலும் குறிப்பிட்டவர்களை எதிர்த்து அடித்ததுமின்றிக் கெட்ட வார்த்தைகளையும் கூறினராம். ஆகவே இவரை இக் கோர்ட்டில் ஆஜர் செய்ய நேரிட்டது."

"சரி சாட்சிகளெல்லாம் வந்திருக்கின்றனரா?" என்று கேட்டார் நீதிபதி.

"ஆகா! பிரபுவே!" என்றார் இனிஸ்பெக்டர்.

"எங்கே அந்த முன்ஸீப்?" என்று கேட்டார் துடிதுடிப்போடு மாஜிஸ்திரேட்.

"ராமகிருஷ்ணன்! ராமகிருஷ்ணன்! கூப்பிடு" என்று கோர்ட்டுச் சேவகனிடம் கூறினர் பிராசிகியூட்டிங் இனிஸ்பெக்டர். சேவகன் கத்தினவுடன் கூட்டத்திலிருந்து இன்னொரு சிறுவன் அழுத கண்ணோடு விம்மி விம்மிக் கொண்டு வந்து நின்றான். அவனைப் பார்த்தபோது மாஜிஸ்திரேட்டின் முகத்தில் ஈயாடவில்லை. "இந்தப் பையனா முன்ஸீப்?" என்று மாஜிஸ்திரேட் வக்கீலைக் கேட்டார். "அன்று விளையாட்டில் இந்தப் பையன்தான் முன்ஸீப்பாக இருந்தவன்" என்றார் வக்கீல். மாஜிஸ்திரேட்டின் முகம் விழுந்துவிட்டது.

* * *

கைதி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டான். "ராஜா, மந்திரி, தலையாரி, அம்மையார், திருடன்" என்ற விளையாட்டைச் சிறுவர்கள் விளையாடிக்கொண் டிருந்ததாகவும் அந்த விளையாட்டில் 'முன்ஸீப்'பாக இருந்தவன்தான் அடிக்கப் பட்டதாகவும் பிறகு தெரியவந்தது. இனிமேல் இத்தகைய விளையாட்டைத் தமிழ்நாட்டில் சிறுவர் ஆடக்கூடாதென்று ராவ்பகதூர் தாண்டவராயர் அன்று கூறினரா இல்லையா வென்பதை நமது நிருபர் கவனித்து எழுதிக்கொண்டு வராதது விசனிக்கத்தக்கது.

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும் :—

கலியாண உதவி நிதி,

589, பைகிராப்ட்ஸ் ரோட்,

மதருஸ்.

கதரை அணியுங்கள்

குரு கோவிந்த சிங்கன்

(வ. வே. ஸு. அய்யர் எழுதியது)

[பூர்வ கதை :—தேக பகதூரை டில்லி பாதுஷா சிரச்சேதம் செய்து விட்டான். அவன் குமாரன் கோவிந்த ராயி முகலாயரைப் பழி வாங்க எண்ணிச் சண்டி தேவிக்கு யாகம் செய்கின்றான். தேவி இரத்த பலி வேண்டுவதாகச் சொல்லி, "யார் தங்கள் உயிரைப் பலி கொடுக்க முன் வருகிறார்கள்?" என்று வினவுகிறான்! பல்லாயிரம் பேரில் தயா லால் என்ற ஒரே ஒருவன் முன்வந்து, தன்னைப் பலி கொடுக்கலாம் என்கிறான்.]

வீரப்படை சேர்த்தல்

குழுமியிருந்த சிஷியர்கள் அவனுடைய தியாகத்தைக் கண்டு வியந்துகொண்டும், தங்களுக்கு அவனுடைய தீரமும் தியாகமும் வரவில்லையே என்று நாணிக்கொண்டும், இந்த அற்ப மனிதனைக் குரு ஏற்றுக்கொள்ள மாட்டான் என்று தமக்குள் சொல்லிக் கொண்டும், இன்னும் பல் வேறுபட்ட மெய்ப்பாடுகள் நிரம்பிய சித்தத்தோடு, மேடை மீது மேலே என்ன நிகழப்போகிறது என்று கவனிக்க லானார்கள். கோவிந்த ராயி ஆனந்த பரவசமாயினான். அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவனாகிலும் தன் உயிரைத் திரணமாக நினைத்தானே என்று களிப்படைந்தான். ஏழையென்று எல்லோராலும் இகழப்பட்ட ஓர் மனிதனே இத்தகைய தியாகத்துக்கு முதன் முதல் உடன்பட்டான் என்ற செய்தி, அவனுக்கு ஏழைகளிடத்தில் இருந்த அன்பையும் நம்பிக்கையையும் நூறு மடங்கு பெருகச் செய்தது. "மகனே, இங்கு கூடியிருக்கிற அனைவரினும் நீயே உயர்ந்தவன் என்று உனது தியாகமும் திடசித்தமும் உலகினுக்குக் காட்டிவிட்டன. உனது அடக்கம் உன் தியாகத்தினுக்கும் உயர்வைத் தந்து விட்டது. உன் மகா புனிதமான உடலை மகா காளிக்கு அர்ப்பணம் செய்! என்னுடன் வா!" என்று சொல்லி, குரு அவனை அழைத்துக் கொண்டு கூடாரத்துக்குள் சென்றான்.

இந்தத் தியாகமும், குருவின் நிஷ்களங்கமான வார்த்தைகளும், தாங்கள் மேலானவர்கள் என்ற அபிமானமும் அகங்காரமும், நிறைந்திருந்த ஜனங்களுடைய கண்ணைத் திறந்து விட்டன. 'பிறப்பன்று மேன்மையைத் தருவது, செல்வமன்று பெருமையைத் தருவது, மற்றுத் தியாகமும் தன்னடக்கமும் தீரமும்தான் மனிதனை உயர்த்துகின்றன" என்ற உணர்ச்சி அவர்கள் மனதில் அரும்பலாயிற்று. அதற்குள்ளும் கோவிந்த குரு சக்தி வெறி கொண்டவன் போல இரத்தம் ஒழுகும் வாளை ஏந்திக் கொண்டு பாசறையினின்று வந்து மேடை மீது மறுபடி ஏறி, "மகா காளிக்கு இந்தப் பலி போதாது. தங்கள் உடலைப் பலியாகக் கொடுக்கத் தயாராக உள்ள இன்னும் நால்வர் வேண்டும். யார் வருகிறீர்கள்?" என்று கேட்டான். அவையில் மறுபடியும் மௌனமே. ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் ஸாஹப்தாஸ் என்கிற பஞ்சாபு நாட்டு நாவிதன் வந்து தன்னை ஸ்வீகரித்துக் கொண்டு பலி கொடுக்க வேண்டுமென்று சொன்னான். அவன் வந்து நின்ற கையோடு இன்னொருவனும் எழுந்து முன் வந்து, "அடியேன் ஓர் ஏழைப் பிராமணன். தட்சிண தேசத்தான். என் பெயர் தருமன். நான் தீர்த்த யாத்திரை செய்வதற்காக, என் நாட்டை விட்டுப் புறப்பட்டவன். நம் நாடு தற்போதிருக்கிற மகா கோரமான நிலைமையில் ஆயிரம் காசி யாத்திரைகளை விட, நம் ஜாதிக்குப் பலமும் வெற்றியும் வருவதற்காகத் தங்கள் ஆக்கினையைப் பூர்த்தி செய்து சண்டி தேவிக்கு இவ்வுடலை அர்ப்பணம் செய்வதே மேலான தர்மம் என்று தேவரீருடைய திருவாக்கும், இந்தப் புண்ய புருஷர்களுடைய அரும் பெருந் தியாகமும் எனக்கு அறிவுறுத்திவிட்டன. அடியேனையும் ஸ்வீகரித்துக் கொள்ளத் திருவுளம் கொள்ள வேண்டும்" என்று கூறினான். அதற்குக் குரு, "புத்திரர்களே, நீங்கள் புண்ணிய சீலர்கள்! உங்களுடைய புகழ் இந்தப் பூமண்டலம் உள்ளவும் ஒளி வீசிக் கொண்டிருக்கப் போகிறது. செல்லுங்கள் பாசறைக்குள்ளே!" என்று சொல்லி அவர்களையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

சற்று நேரமாயிற்று. மறுபடியும் உருவிய வாளும் பெருகிய இரத்தமுமாக வெளி வந்து "இன்னும் யார் வருகிறீர்கள்?" என்று குரு கேட்டான்.

மனிதனுக்குப் புகழும் கீர்த்தியும் இனிதாக இருக்கிறது. தியாகத்தின் ஒளியை மனிதன் நன்கு உணருகிறான். தான் தியாகியாக விளங்க வேண்டும் என்று அடிக்கடி தீர்மானித்துக் கொள்ளுகிறான். ஆனால் தியாகம் அழைக்கிற காலத்தில், தன் இரத்தத்தைக் கொடுக்கவேண்டிய சமயம் வந்து விட்ட காலத்தில், சுக சௌக்கியங்களை விடவேண்டிய நேரம் வரும்போது, பஞ்ச பூதங்கள் பின் வாங்குகின்றன. உடலும் மனமும் தவிக்கின்றன. "இந்த முறை எம்மை மன்னித்து விடேன்! அடுத்த முறை பின் வாங்காமல், மறு வார்த்தை பேசாமல் நாங்கள் நெருப்பில் வேண்டுமானாலும் வீழ்கிறோம்" என்று சொல்லிக் கெஞ்சுகின்றன. என்னே மனிதனுடைய பலவீனம்!

ஜனங்கள் மீண்டும் மௌனக் கடலிலேயே ஆழ்ந்தனர்.

அதைக்கண்டு "இத்தனை ஆண் பிள்ளைகள் குழுமியிருக்கின்றீர்களே, இத்தனை சிஷியர் கூடி யிருக்கின்றீர்களே, இத்தனை பிராமணரும் க்ஷத்திரியரும் இங்கு உட்கார்ந்திருக்கிறீர்களே, உங்கள் வீரமும் பெருமையும் ஒய்ந்து போயினவோ? அறமும் தியாகமும் நம் நாட்டை விட்டே போய்விட்டனவோ?" என்று குரு உக்ரமாக வினவினான்.

ஆனால் பெரியோ ரெல்லாம் பெரியோர் அல்லர்! சிறியோரெல்லாம் சிறியோர் அல்லர்! "நாங்கள் சூத்திரர்கள். இருப்பினும் தேவரீர் திருவுளமானால் வருகிறோம். எங்கள் தியாகத்தைச் சண்டி தேவி ஏற்றுக் கொள்ளட்டும்!" என்று சொல்லிக் கொண்டு ஹிம்மதன் என்னும் ஜகந்நாத க்ஷேத்திரத்து வியாபாரியும் மோஹ

னன் என்னும் ஹஸ்தினாபுரத்து ஜாட்டனும் * ஒருவன் பின் ஒருவனாக முன் வந்தார்கள். குரு அவர்களையும் அதே மாதிரி அழைத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டு, இரத்தம் கசியும் வாளோடு திரும்பி வந்து, “குழந்தைகளே உங்களுக்குள் நின்று தோன்றிய இவ்வைந்து மகா புருஷர்களுடைய வீரமும் தியாகமும் நமக்கு என்றும் அழியாத உதாரணமாக இருக்கப் போகின்றன! சண்டிதேவி திருப்தி யடைந்து விட்டாள்! இனிச் சென்று நாளை இங்கேயே கூடலாம்” என்று சொல்லி விடை கொடுத்தனுப்பிவிட்டு மறுபடியும் கூடாரத்தினுட் பிரவேசித்தான்.

உயிர்ப் பலி கொடுக்க முன் வந்த ஐவரையும் குரு, காளிக்குப் பலிதானமாக வெட்டிவிட்டான் என்றே சிஷ்யர் நம்பியிருந்தார்கள். வந்த இவ் ஐவரும் குரு தங்களைப் பலி பீடத்தில் வைத்து வாளால் வெட்டிக் காளிக்குப் பலி கொடுக்கப் போகிறான் என்று நம்பித்தான் முன் வந்தார்கள். ஆனால் குருவின் உத்தேசம் அவ்வாறு இல்லை. தன் சிஷியர்களுக்குள் அச்சமின்றித் தம் இரத்தத்தைக் கொடுக்க ஆயத்தமாக ஓர் ஐவரேனும் இருக்கிறார்களா என்று பார்ப்பதே அவன் கருத்து. ஆகையால் தியாகிகள் வரவர, அவர்களை ஒவ்வொருவனாகக் கூடாரத்தினுள் கொண்டுபோய் ஓர் இடத்து இருத்தி வைத்துவிட்டு, ஓர் ஆட்டையே பலி கொடுத்து, அந்தப் பலி கொடுத்த வாளுடனேயேதான் அவையில் வந்து மற்றோரை அழைத்தான். ஆகவே சிஷ்யர் குழாம் கலைந்த பிறகு கூடாரத்தினுள் குரு சென்றபோது, அவ் ஐந்து பேர்களும் பயபக்தியுடன் எழுந்து குருவை வணங்கினார்கள். குருவும் அவ் ஐயரையும் ஆலிங்கனம் செய்துகொண்டு, “என் குழந்தைகளே! நீங்களே, படுகுழியில் வீழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கிற நம் நாட்டையும், நானகனும் அர்ஜ்ஜுனனும் தேகபஹதூரும் நமக்குக் காட்டியுள்ள சனாதனமான தர்மத்தையும் காக்க வந்த புண்ணிய புருஷர்! நீங்கள் தாம் காலஸா—மூல புருஷர் கோஷ்டி. இந்தக் காலஸா இனி என்றும் அழியாது. உங்களுடைய உதாரணத்தைக் கண்ணுற்று நம் சிஷியர் அனைவரும் மகா வீரர் ஆகப்போகிறார்கள். அவர்களுக்கு இனி ஜாதி கிடையாது; குலம் கிடையாது. நாம் எல்லோரும் இனி சிங்கன் என்கிற பட்டத்தையே வைத்துக்கொள்வோம். அகால புருஷனுக்கு நிவேதனம் செய்துவிட்டுப் பிரசாதத்தை நம் காலஸாவின் சன்னிதியில் எவன் பயபக்தியோடு சாப்பிட்டு நம் தர்மத்தை அங்கீகரிக்கிறானோ அவன் தன் பழைய ஜாதியை நீங்கிச் சிங்கனாகி விடுகிறான். நம் சிங்க கோஷ்டி முகலாயரை வென்று அறத்தை நிலைநாட்டப் போகிறது; வாரீர் முதன் முதலாக நம் புதிய சம்ஸ்காரத்தைத் தொடங்குவோம்!” என்று சொல்லிக்கொண்டு, பானகம் செய்து, அதில் தன் வெற்றி வாளைத் தோய்த்து, அச்சுதனாய், அனந்தனாய், அகாலனாய் இருக்கும் தனிப் பெருங் கடவுளுக்கு அதை அர்ப்பணம் செய்து, அந்த ‘அமிருத’த்தை அச்சிஷியர்களுக்கும் கொடுத்தான். அவர்கள் அதைப் பானம் செய்து முதல் காலஸாக் கூட்டம் ஆகிவிட்டார்கள். கோவிந்தனும் அவர்களை அந்த அமிருத பானத்தைத் தனக்குத் தரச்சொல்லித் தானும் அதை அருந்தி, “ஐந்து சிஷியர் எங்கு கூடியிருந்தாலும் அங்கு நான் உயிரோடிருக்கையிலும் இறந்த பிறகும் சான்னியத்தியமாகவே இருந்து, அவர்கள் மனம், வீரத்தையும் சத்தியத்தையும் தர்மத்தையுமே நாடும்படி செய்வேன்” என்று பிரதிக்கினை செய்தான். தன் பெயரைக் கோவிந்தராயி என்பதற்குப் பதிலாகக் கோவிந்தசிங்கன் என்று மாற்றி வைத்துக்கொண்டு, அவர்களுக்குப் பின்வருமாறு உபதேசம் செய்தான்:—

“இனி நீங்கள் எல்லோரும் சிங்கங்களாகி விட்டீர்கள்! எந்தக் குலத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் இன்று முதல் நீங்கள் அனைவரும் க்ஷத்திரியர்கள். ஆகையால் ஒவ்வொருவனும் சிங்கன் என்ற பெயரைப் பட்டப் பெயராக வைத்துக்கொள்ள வேண்டியது. நீங்கள் எதையும் கண்டு அஞ்சக் கூடாது. உலகம் அனைத்திலும் எல்லையற்ற பரம்பொருள், பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமும் இன்றி, தொட்ட தொட்ட இடம் தோறும் இருந்துகொண்டு, நம்மீது எல்லையற்ற கருணையைப் பொழிந்துகொண்டே நமக்குச் சுகம் என்று தோன்றுமவற்றையும் துக்கம் என்று தோன்றுமவற்றையும் அளந்து கொடுத்துக்கொண்டு வரும்போது, நாம் எதற்காகப் பயப்படுவது? உங்களுடைய தர்மங்களை—உங்களுடைய கடமைகளை—தைரியமாக, தீவிரமாக, மறதியின்றி, சோம்பலின்றி முடித்துப் பாரத தேசத்தைச் சுதந்திர நாடாக்கி, அதில் தர்ம ராஜ்ஜியம் நிலவும்படி செய்வதே உங்கள் கர்த்தவியம். அதற்காக நீங்கள் பெண்டு பிள்ளைகளையும், குடும்ப சுகங்களையும், தனங்களையும், பூமிகளையும் இழக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். நீங்கள் முகலாயருடன் செய்யப்போகும் போரில் வதையுறலாம், சிறை புகலாம், சித்திர வதைகள் செய்யப்படலாம். இந்தக் கஷ்டங்களைச் சந்தோஷத்தோடு நீங்கள் ஏற்றுக்கொண்டால்தான் அகால புருஷனுடைய கிருபை உங்களுக்குச் சித்திக்கும்; தர்மத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்கள் என்ற புகழ் உங்கள் பெயருக்கு என்றும் நங்தாத ஒளி தந்துகொண்டிருக்கும். இந்தச் சத்தியங்களை மற்றோருக்கும் உபதேசித்து நம் சிஷியர் அனைவரையும் அசகாய சூர ராக்குங்கள்!”

குருவினுடைய சம்ஸ்காரத்தைப் பெற்று, அவன் கொடுத்த அமிருதபானத்தைச் சாப்பிட்டு, அவனுடைய உபதேசத்தையும் கேட்டதும், தயாலால் முதலிய ஐவரும் புதியதோர் ஜன்மம் எடுத்து வந்தவர்கள் போலாகி விட்டார்கள். அன்று ஆபு பர்வத்தில் நடந்த பிரம்மாண்டமான யாகத்திற்குப் பிறகு எவ்வாறு சாமான்ய ஜனங்கள் யாக குண்டத்தின் சன்னிதானத்தில் புதிய க்ஷாத்திர வேகத்தைப் பெற்று ராஜ புத்திரர் என்கிற பெயருக்கு அருகமாக விளங்கினார்களோ, அவ்வாறே இவ் ஐந்து பிரதம சிஷியர்களும் க்ஷத்திரியர்கள் என்று அழைக்கப்படவும் சிங்கர்கள் என்ற பெயரைத் தரிக்கவும் தக்கவர்கள் என்று சொல்லும்படி புதியதோர் ஒளியுடன் விளங்குகிறார்கள்.

[கதையின் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

* வேளாளன்.

வழிபோக்கன் பேச்சு

முன்னேற்றம்

நமது தேசத்தில் எதில் முன்னேற்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் 'எலெக்ஷன்' விஷயத்தில் மட்டும் முன்னேற்றம் மும்முரமா யிருக்கிறது. மேனாடுகளில் தேர்தல் காலத்தில் நடத்தும் அத்தனை முறைகளையும் அவை நியாயமாயினும், அநியாயமாயினும் பின்பற்ற அபேட்சகர்கள் தயாரா யிருக்கின்றனர். ரங்கூனில் எலெக்ஷன் நோட்டீசுகளைப் போடுவதற்காக ஒரு அபேட்சகர் ஆகாய விமானத்தை உபயோகப்படுத்தி விட்டாராம். இனிமேல் ரேடியோப் பிரசங்கங்களும் நடந்தாலும் நடக்கும். இந்த முன்னேற்றத்திற்காக நாம் அகமகிழ்வதா? இல்லையா?

வரதட்சிணை வாயில் மண்

வரதட்சிணை வாங்கும் வழக்கத்தில் மண்ணைப்போட வடக்கே ரேவா சமஸ்தானம் ஆலோசித்து வருகிறது. சட்டம் நிறைவேறிய பின்பு கல்யாண காலத்தில் வரதட்சிணை தருபவர்களும், வரதட்சிணை வாங்குபவர்களும் தண்டிக்கப்படலாமாம். ஆனால் வரதட்சிணை என்பது எது, சீர் என்பது எது என்பதை நிச்சயிக்கச் சட்டம் உதவிசெய்யுமா வென்பதைப் பார்க்கவேண்டும். இந்தச் செய்தியைக் கேட்டு, பிரிட்டிஷ் இந்தியாவிலும் இந்தச் சட்டம் புகுந்துவிடுமோவென்று சிலர் ஐயுறுகின்றனர். 'ஐந்துக்குமேல் அரசனும் ஆண்டி' என்ற பழமொழியை இந்தச் சட்டம் நீக்கிவிடுமென்று பேசிக்கொள்கிறார்கள்.

யார் கையில்?

காசி ஜில்லா போர்டார் முன்னே வைஸ்ராய் பேசும்போது, "அநேக ஆயிரக்கணக்கான மக்களின் தலையெழுத்து ஜில்லா போர்டுகளாகிய உங்கள் கையில் இருக்கிறது" என்று கூறினாராம். ஆனால் ஜில்லா போர்டுகளின் தலையெழுத்தும், தாலூகா போர்டுகளும் தலையெழுத்தும் துரைத்தனத்தின் கையில் அதாவது வைஸ்ராய் கோஷ்டியின் கையி லிருப்பதை அவர் மறந்து விட்டாரோ?

எதில் அவருக்கு வெற்றி?

லார்டு வில்லிங்டன் எதில்தான் வெற்றியடைந்தார்? ஒன்றுமில்லை. சட்டமறுப்புக் கிளர்ச்சியின் பகிரங்கத் தோற்றத்தை பலவந்தத்தா லடக்கினார். சீமையிலுள்ள 'டோரி' பிரமுகர்களை அதனால் உத்ஸாகப்படுத்திப் புதிய அரசியல் திட்டத்தில் 'முதல் வைஸ்ராய்' என்ற பெயரை அடையவேண்டுமென்பது அவர் ஆசை. லக்ஷக்கணக்கான மக்களைச் சிறையி லடைப்பதால் பிரிட்டிஷாரின் கவுரவம் அதிகமாகுமென்று சிலர் நினைத்துக்கொண் டிருக்கலாம். அந்தக் கோஷ்டிக்கு வில்லிங்டன் நண்பராவாரா? 'உதவி மறுக்க வேண்டும்' என்ற எண்ணம் இப்போது ஒவ்வொரு இந்திய இருதயத்திலும் ஏற்பட்டு விட்டதே, இதுதான் அவர் அடைந்த லாபம். எந்த இயக்கத்தையாவது இப்படி அடக்கினால் அது எதிர்பாராத சமயங்களில் எதிர்பாராத ரூபத்தோடு கிளம்புவதற்கு இடமுண்டே, இதை வில்லிங்டன் அறியாரோ?

—ஸிந்து அப்ஸர்வர்.

போலீஸ் புலிகள்

போலீஸ் இலாகாவில் அநேகர் தாங்கள் பொதுஜனங்களின் ஊழியர்களென்பதை அடியோடு மறந்து எஜமான்களெனத் தங்களை எண்ணிக்கொண் டிருக்கின்றனர். கடுதாசியில் எப்படியிருந்தாலும், யாரைக் கண்டாலும் அதிகாரத்தோடு அமுல் செலுத்துவதே போலீசாரின் நடவடிக்கையாயிருந்து வருகிறது. இதனால் பொதுஜனங்களின் மனதில் அருவருப்பு ஏற்பட்டிருப்பதால் சர்க்காருக்குக் கூட அவ்வப்போது இடைஞ்சல்களேற்படுகின்றன. இந்த இலாகாவிலுள்ளவர்களின் மனத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால் இந்த இலாக்காவின் அதிகாரத்தைப் பொதுஜனப் பிரதிநிதிகள் கையில் கொடுத்துவிடவேண்டும்.

—"டிரிபியூன்"

லங்காஷயரும் காந்தியும்

லண்டனில் வெளியாகும் "நியூஸ் கிரானிகல்" பத்திரிகையில் நீண்ட வியாசமொன்றை மிஸ்டர் ஹாட்ஸன் எழுதியிருக்கிறார். அதில் ஓர் பகுதி பின்வருமாறு:—

"மிஸ்டர் காந்தியும் அவரது கோஷ்டியும் சீமைத்துணி பகிஷ்கார இயக்கத்தைத் தொடங்கியபோது, 1923 லிருந்து 1930 வரை அந்த இயக்கம் மும்முரமா யிருந்த சமயம் இங்கே பிளாக்பர்ன் போன்ற நகரங்களில் என்னென்ன சீர்கேடுகள் ஏற்பட்டுவிட்டனவென்பது சொல்லத்தரமன்று. ஆதிகாலந்தொட்டு இருந்துவந்த அநேக தறிகள் மூடப்பட்டன. ஆலைகள் துருப்பிடித்த இரும்பாகிவிட்டன. அநேக ஆண்டுகளாக இந்தியனுக்காக வேஷ்டி பண்ணிக் கொடுத்துக்கொண்டிருந்தவர்களெல்லாம் பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று. 30 ஆலைகள் அடியோடு அழிந்தன. 100 ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. மிஸ்டர் காந்தி இந்தப் பரிதாபக் கதைகளை அறிவாரா? இந்தியாவில் இதுவே சமயமென்று சுதேசி ஆலைகளை ஏற்படுத்திக் கொள்ளை லாபம் அடிக்க சில முதலாளிகள் முயன்றதாலும், ஜப்பான் கழுத்தை யறுக்கும் போட்டாபோட்டியில் இறங்கியதாலும் இத்தனை ஏழைகளும் இங்கு தவிக்கின்றனர்."

மகாத்மா லங்காஷயருக்குச் சென்றிருந்தபோது ஒரு சமாதானத்திற்கு ஆங்கில ஆலைக்காரர்கள் வரத் தயாராவென்று கேட்டதுண்டு. அப்போது அவரைப் புறக்கணித்ததன் பயனை இப்போது அனுபவிப்பதாக மிஸ்டர் ஹாட்ஸன் எண்ணிக்கொள்ளட்டும். இந்திய ஆலை முதலாளிகளும் பிரமாதமாக வாழவில்லை என்பதையும் அவர் அறிவாராக.

சிங்கப்பூரில்

ஹரிஜன் பத்திரிகையும், சுதந்திரச் சங்குப் பத்திரிகையும் சங்கு நூல்களும் அடியிற் கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

K. முகம்மத் நூர் உத்தீன்,

நெ. 71, சாங்கோன் ரோட், சிங்கப்பூர்.

குமரி முனையில் ஸ்நானம்

சென்ற 22-ம் தேதி மகாத்மாஜீ குமரி முனைக்குச் சென்றிருந்தபோது, பாரத நாட்டின் தேன் கோடியிலுள்ள அந்தப் பாறைக்கருகே கடலி லிறங்கி மகாத்மாஜீ காலையில் ஸ்நானம் செய்த அக் காட்சியை ஸ்ரீமதி மீராபென் நமக்கு எழுதியிருக்கின்றார்.

காந்திஜி விஜயம்

(வார அலுவல்கள்)

26-1-34 வெள்ளிக்கிழமை

மணி.

காலை 8 மதுரையினின்று புறப்படுதல்
10-30 காரைக்குடிக்கு வருதல்
11 அமராவதி புதூரில்
மாலை 2-45 தேவகோட்டை
5 பாகநேரி விஜயம்
6-30 மானுமதுரை / சிவகங்கை
இரவு 8-30 மதுரைக்குத் திரும்புதல்

27-1-34 சனிக்கிழமை

மணி.

காலை 7-30 மதுரையில்
11-11 போடிநாயக்கனூர்.
மாலை 2-க்கு மேல் உத்தமபாளையம், கோம்பை, தேவாரம், கம்பம்.
6 தேனி
6-30 பெரியகுளம், வத்தலக்குண்டு
இரவு 9 திண்டுக்கல் வரவு

28-1-34 ஞாயிற்றுக்கிழமை

மணி.

9-30 பழனி பிள்ளாப்பாரத்தில்
9-45 உடுமலைப்பேட்டை
11 பொள்ளாச்சி
மாலை 4-15 போதனூர் வித்யாலயத் திறப்பு
6 கோயமுத்தூர்

மணி.

29-1-34 திங்கட்கிழமை

6-30 மேட்டுப்பாளயம் வழியாகக் கூனூருக்கு விஜயம்.

5-2-34 தேதி வரை கூனூரில் மகாத்மாஜி ஓய்வெடுத்துக் கொள்கிறார்.

யாருக்கு விரோதம்?

(மகாத்மாவின் பிரசங்கம்)

[பல்லுருத்தியில் ஸ்ரீ தர்ம பரிபாலன யோகம் என்ற ஹரிஜன சபையார் "இவ் வியக்கத்தை ஹிந்து சமயத்தின் பெயரால் நடத்தவேண்டாம் என்று தெரிவித்தார் கள். அதற்கு மகாத்மாஜீ அளித்த பதில்.]

இந்த இயக்கம் ஹிந்து மதத்தை வலுப்படுத்துவதற்காக அல்ல. நான் ஒரு பாவத்தைச் செய்துவிட்டதற்காகப் பிராயச்சித்தம் செய்து கொள்வேனுயின், அதை நான் பலம் திரட்டிக் கொள்ளவே செய்கிறேன் என்று சொல்ல லாமோ? ஆத்மத் தூய்மைக்காகவே பிராயச்சித்தம். தீண்டாமையை, ஹிந்துமதம் செய்துவரும் ஒரு பாவம் என்றே நான் கருதுகிறேன். ஆகையால், இவ்வியக்கம் ஹிந்துமதத்தைத் தூய்மை செய்யக் கைக்கொண்ட இயக்கம் என்றுதான் நான் சொல்ல முடியும்.

தங்களை ஹிந்துக்களென்று சொல்லிக்கொள்ளுவோருக்கே நான் கடனாளியாவேன். ஹிந்து மதத்தினிடம் தங்களுக்குச் சம்பந்தமில்லை யென்போருக்கு நான் கடனாளியல்ல. என்னை இப்பொழுதுதான் உங்கள் கோயிலினுள் அழைத்துச்சென்று, ஹிந்து முறைப்படி நடந்த பூஜைகளையும் காட்டினீர்கள். என்னைப் போன்றே நீங்களும் ஈசுவர பூஜை செய்யும்பொழுது, என் ஹிருதயம் உங்களை நாடிவிடுகிறது. நீங்கள் ஹிந்து சமயத்தைப் புறக்கணித்து, வேறு சமயத்தில் புகுந்தீர்களானால், நான் ஹிந்து என்ற முறையில் உங்களுக்குப் புரியவேண்டிய கடமை முடிந்து விடுகிறது; சகோதர மனிதன் என்ற முறையில் புரியவேண்டிய கடமைதான் மிகுந்து நிற்கும். ஆனால், எதுவரையில் வெவ்வேறு சமயங்கள் இருக்கின்றனவோ அதுவரையில் அததற்குள்ள தனிக் கடமைகளும் இருக்கின்றன. இதனால், எனது சகோதர முஸ்லீம், கிருஸ்தவர், பார்ஸீ, யூதர் இன்னும் பிறருக்காக நான் உழைக்க மாட்டேனென்று அர்த்தமில்லை. நான் ஏறி நிற்கும் பிரசங்க மேடையை இழந்து விட்டேனானால், எவர் ஒற்றுமைக்குமே நான் உழைக்கமுடியாமற் போய்விடும்.

நீங்கள் ஹிந்து மதத்தை விட்டு விலக விரும்பினால், குசாலாய்ச் செய்யலாம்; அப்படிச் செய்ய உங்களுக்குப் பூரண உரிமை யுண்டு. பலவந்தத்தால் ஹிந்து மதத்துக்குள் உங்களை நான் நிறுத்திவைக்க முடியாது; ஆனால், எனது அன்பின் வலுக் கொண்டுதான், நிறுத்திவைக்க இயலும். உங்களுக்கு நான் சேவை புரிய முன்வந்ததில், சற்றுக் காலந் தாழ்த்து விட்டேன் என்று சொல்லக் கூடும்; இருக்கலாம். ஆனால், கடவுள் என்னை அதற்காகத் தண்டிக்கமாட்டார். ஏனெனில், நான் சென்ற ஐம்பது வருஷங்களாகவே தீண்டாமை வழக்கத்தை எதிர்த்து வந்திருக்கிறேன். இப்பொழுது, எனது நிலைமை உங்களுக்கு ஓரளவு நன்றாய் விளங்கி யிருக்கு மென்று நினைக்கிறேன். ஹரிஜன இயக்கம் முஸ்லீம்களுக்கோ, கிருஸ்தவர்களுக்கோ, யூதர்களுக்கோ விரோதமான தல்ல; மோசடிக்குத்தான் விரோதமானது. மோசடியை ஒழிக்க வேண்டுமென்பதே என் நோக்கம்.

இந்தியாவில் மிகச் சிறந்தது

7 அளவுகள்
1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்கு
ரூ. 10, 14, 18, 23, 29, 35, 41.
சிலோனில் முக்யமான ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.
!

சகல விதமான சமையலுக்கும் சர்வ சம்மதமாய், செலவுச் சுருக்கம் சிக்கனம், செம்மை உணவு ருசி, முதலிய எல்லா சௌகரியங்களும் பொருந்திய தெனச் சிறந்து விளங்கும் **ருக்மணி குக்கர்** சமையலறைக்கு உங்களுடைய வீட்டிலிருக்க வேண்டாமா?

விபர புத்தகம் இனாம்.

ருக்மணி குக்கர் கம்பெனி
இராயபுரம். (10), சென்னை.

யாத்ரா மார்க்கம்

வாழைப் பழமும் கணையாழியும்

ஏலத்திற்கு வந்தது ஒரு வாழைப் பழம்; முதல் கேள்வி ஒரு ரூபாய். மகாத்மா காந்திஜீக்கு எர்ணுகுளத்தில் காணிக்கை வந்த சாமான்களில் இந்த வாழைப்பழமும் ஒன்று. மகாத்மா இதை ஏலம் போடலானார். பிரசங்க மேடைக்கு வந்து சேர்ந்தான் ஒரு ஹரிஜனச் சிறுவன். “இந்த வாழைப் பழத்தை ஏலமெடுத்து இந்த ஹரிஜனச் சிறுவனுக்குக் கொடுக்கலாம்; சுபகரமான தானம்” என்றார் காந்திஜீ. ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று ஏலம் உயர்ந்தது. கடைசியில் இடைப்பள்ளி கருணாகரமேனன், தமது கலியாணத்தில் மனைவி போட்டுவிட்ட மதிப்பரிய மோதிரத்தை, அந்த வாழைப் பழத்துக்கு விலையாகக் கொடுத்தார். வாழைப் பழத்தை ஹரிஜனச் சிறுவனும் மற்றுமிருந்த பலருமாகச் சேர்ந்து உண்டார்கள்.

சுயமரியாதை இயக்கத் தவரிடம்

மகாத்மாஜி திருவனந்த புரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது சில ஈழுவ இளைஞர்களும் தீயர் வகுப்பினரும் அவரை வந்து பேட்டி கண்டனர். “மகாத்மாஜி! ‘மதம்’ என்ற மூட நம்பிக்கையை ஒழித்து இந்தியாவைக் காப்பாற்றுங்கள்” என்று கேட்டனர். “மதமும் ஜாதிப் பாகுபாடும்தான் ஹரிஜனங்களுக்கு இன்னல் விளைப்பவை” என்று எழுதப்பட்டிருந்த ஒரு பத்திரிகையை மகாத்மாவிடம் தந்தனர். காந்திஜி அந்த இளைஞர்களுக்கு மிக்க ஆதரவோடு பதில் கூறினர்.

“ஜாதிப் பாகுபாடு ஹரிஜனங்களுக்கு இன்னல் இழைக்கலாம்; இழைக்காமலுமிருக்கலாம். ஆனால் வர்ண தர்மம் ஹரிஜனங்களுக்கு விரோதியன்று. மேலும் மதம் ஒருபோதும் ஹரிஜனங்களுக்குக் கெடுதல் செய்யவே செய்யாது. மதத்தின் சார்பாகத்தான் நான் இன்று ஹரிஜன் விமோசன இயக்கத்தைத் தொடங்கி யிருக்கின்றேன். நானும் மதத்தின் காரணமாகவே ஒரு ஹரிஜனனாகி மாறிவிட்டேன். ஹரிஜனங்களுக்கு மதபக்தி இல்லாது போனால்தான் அவர்களுக்குக் கெடுதி நேரும். மனிதனைக் கட்டுப்பாட்டுக்குட் படுத்தி அறிவுறுத்திக் காப்பது மத உணர்ச்சிதான்.”

“அம்புபோல் தைக்காதோ!”

திரும்பத் திரும்ப ஹ்ருதய பரிசுத்தத்தாலேயே ஹரிஜன விமோசனம் ஏற்படும் என்பதை மகாத்மா வற்புறுத்தி வருகிறார். திருவனந்தபுரம் மைதானத்தில் பேசுகையில் அவர் கூறிய மன முருக்கும் வார்த்தைகள் வருமாறு:—

“சவர்ண ஹிந்துக்களின் ஹ்ருதயத்தில் பூர்ணமான மாறுதல் வேண்டும். ராஜாங்கத்தின் உதவி நேர்முகமானதாயிருக்க முடியாது. ராஜாங்கத்தால் தனி மனிதனுடைய ஹ்ருதயத்தை மாற்ற முடியாது. சகோதர மனிதனுடைய உள்ளத்தை மாற்ற எந்த ஒரு மனிதனாலும் முடியாது; என்னால் முடியாது. அதற்கு ஈசுவரனைத்தான் பிரார்த்திக்க வேண்டியிருக்கிறது. என் சொற்கள் அம்புபோல் வலிமை பெற்று, உங்கள் உள்ளத்தில் தைத்து, அங்கேயே பதிந்து கிடக்காவோ! என் வார்த்தைகளுக்கு இந்தப் பலத்தை அருளும்படி, அல்லும் பகலும், தூக்கத்தில்கூட, அநவரதமும் நான் ஆண்டவனைப் பிரார்த்திக் கொண்டே யிருக்கிறேன். ஹிந்து தர்மம் தீண்டாமை நீங்கிப் பரிசுத்தப் படவேண்டும்; தலைக்குமேல் வந்திருக்கும் பேராபத்தினின்றும் ஹிந்து மதம் காப்பாற்றப்பட வேண்டும். இந்த ஆசைகள்தாம் எனது அந்தப் பிரார்த்தனையின் காரணம்”

“கடவுள் என்ன சொல்லுவார்!”

வரவேற்புக் கமிட்டிக்காரர் பணத்தைத் தமது வரவேற்புக்காகக் கண்டபடி செலவழிப்பதை, மகாத்மாஜீ பொதுக்கூட்டங்களில் திரும்பத் திரும்பக் கண்டித்து வருகிறார். “நீங்கள் இந்தமாதிரி செலவழித்தீர்களானால், என் சாப்பாட்டை என் ஜேபியிலேயே தயார் செய்துவைத்துக் கொண்டுதான் நான் பிரயாணம் செய்ய வேண்டி நேரிடும். இப்படித்தான் கொஞ்ச காலத்துக்குமுன் நான் செய்தேன்” என்று துறையூரில் சொன்னார். மறுபடியும் திருவனந்தபுரத்திலும் இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்:—

“ஜனங்கள் கருமிகளைப்போல் பணம் கொடுக்கிறார்கள்; வரவேற்புக் கமிட்டியார்களோ ஊதாரிகள்போல் பணத்தைச் செலவழிக்கிறார்களே! என் கோஷ்டியின் சாப்பாடு வரவேற்புப் பந்தல் வகையராக்களுக்காக, படிக்குப் பாதியைக்கூடச் செலவழித்து விடுகிறார்களே! ‘ஹரி ஜனங்களின் பெயரால் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் வசூலித்தேன்; அதில் பாதி என் ஆகாராதிகளுக்குப் போய்விட்டது’ என்று சொன்னேனானால், கடவுள் என்ன சொல்லுவார்? இதை நான் கண்டிக்கவேண்டும். இல்லாவிட்டால், நான் ஹரிஜனங்களுக்குப் பிரதிநிதி என்று கொண்டாடும் பாத்தியத்தைக் கடவுள் உதறித் தள்ளிவிடுவார்.”

பாஷைப் பரீட்சையா?

ஆலப்புழையில் மகாத்மாஜீ முதலில் ஹிந்தியில் பேசியபொழுது, யாரோ ஆட்சேபித்தார். அதன்மேல் ஆங்கிலத்தில் பேச மகாத்மாஜீ சம்மதித்தார். அப்பொழுது சொன்னதாவது:-

“நான் எவ்வளவு நன்றாக அல்லது எவ்வளவு மட்டமாக இங்கிலீஷ் பேசுகிறேன் என்பதை நீங்கள் பரீட்சை செய்ய விரும்புகிறாப்போ லிருக்கிறது. நான் ஆங்கிலத்தில் பண்டிதனல்ல. இதுவரையில், அந்தப் பாஷையில் நல்ல தேர்ச்சியடைய என்னால் முடியவேயில்லை. அதன் உச்சரிப்பிலும், அதன் மரபுகளிலும் நான் தவறு செய்துகொண்டே யிருக்கிறேன். பொருத்தமான வார்த்தைகளைப் பிரயோகிக்கத் தெரியாமல் திண்டாடிக் கொண்டே யிருக்கிறேன். எப்படியாவது என் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமே, அதற்காகத்தான் நான் இங்கிலீஷ் கற்றுக்கொண்டது. கொஞ்சமாவது ஹிந்தி கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுதுதான், உங்கள் இருபது கோடி இந்தியச் சகோதரர்களின் ஹ்ருதயத்தை நீங்கள் கவ[illegible] அகில இந்திய உணர்ச்சி[illegible] இந்திய எண்ண[illegible]

வளர்த்துக் கொண்டீர்களானால் தான், ஹிந்தியைக் கற்றுக்கொள்ள முடியும். நாம் சர்வ தேசங்களோடும் உறவுகொள்ள ஆங்கிலம் உதவி புரிகிறது; அந்தப் பாஷையில்தான் சர்வ தேச வியாபாரங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பாஷையும் அதனதன் இடத்தில் நல்லதுதான்; அதனதன் காரியத்துக்கு மாத்திரமே உபயோகமானது."

"கடவுள் ஓர் அரக்கனல்ல"

ஹிந்து சமயத்தை வலுப்படுத்துவதற்காகவே, இந்த இயக்கத்தை மகாத்மாஜீ ஆரம்பித்திருப்பதாக, சில அந்நிய மதஸ்தரும், ஹிந்து மதத்தில் வெறுப்புக்கொண்ட சிலரும் சொல்லி வருகிறார்களல்லவா? இதற்குக் காந்திஜீ ஆலப்புழைப் பிரசங்கத்தில் பதில் தந்திருக்கிறார்:—"ஹிந்து சமயம் மெலிந்தாலும் வலுத்தாலும் அதைப் பற்றி, நான் கவலையுறேன். எனது நிலைமை தெளிவானது. தீண்டாமை என்ற அரக்கனை ஹிந்து மதத்தினின்றும் ஓட்டிவிட வேண்டுமென்பதே என் நோக்கம். அது ஹிந்து சமயத்தையே உருக்குலைத்துக் கோரம் செய்துவிட்டது. அதை விரட்டிவிட்டால், ஹிந்து சமயம் தீயதென்று இன்று கூக்குரலிடுவோர்கூட மனம்மாறி விடுவார்கள் என்பது எனது நிச்சயம். எந்தச் சாஸ்திரங்களின்மீது ஹிந்து சமயம் என்ற கட்டிடம் அமைந்திருக்கிறதோ அந்தச் சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு ஏதாவது ஆதாரம் இருக்குமானால், ஹிந்து சமயத்தைக்கூடத் துறந்துவிட நான் தயாராயிருக்கிறேன். ஆனால், சமயம் என்பது கெட்டது என்றும், கடவுள் ஓர் அரக்கன் என்றும் நான் சொல்லத் துணியேன். எனது ஈசுவர நம்பிக்கை வாடா மலர் போன்றது. அது சத்யமென்ற அஸ்திவாரத்தின்மேல் அமைந்திருக்கிறது. அந்த அஸ்திவாரம் ஹிமோத்கிரி போல் வலுக்கொண்டது. கட்சிப் பிரதி கட்சிகளின் பாசப் புயல்களால் அதை அசைக்கவே முடியாது. ஹிந்து மதமும் ஹிந்துக்களும் ஏமாற்றி விட்டால்கூட, அன்னையின்மீது தொற்றிக் கொள்ளும் ஓர் குழந்தையைப் போலவே, ஆண்டவனிடம் நானும் [illegible] தொற்றிக் கொள்வேன். நமது [illegible] இப்பேர்ப்பட்டதாகவே [illegible]டும்."

கொல்லத் தவறும் போலிகளை மறுத்துவிடுங்கள்.

—(விளம்பரம்.)

அதாவது எமதர்ம ராஜாவுக்கு வரவேற்பு நடத்துங்கள் என்பது உட்பொருள் போலும்!

* * *

தங்கத்தை உபயோகப்படுத்திக் கொள்ள வகை தெரியாது, நம் நாட்டு ஜனங்கள் அதை நகையாகப் பண்ணி, தேகத்தில் பல இடங்களில் துவாரம் செய்துகொண்டு வியர்த்தம் பண்ணினார்கள்; புதைத்தார்கள்.

—(வாரப்பத்திரிகை.)

இப்போதுதான் தெரிந்துகொண்டார்களே. அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்; பஸ்மம் பண்ணியும் சாப்பிடுகிறார்கள்.

* * *

எங்கள் சாமானை விற்பது லாபகரமான வர்த்தகம் என்று எங்கள் ஏஜண்டுகள் சொல்லுகிறார்கள்.

—(விளம்பரம்.)

அப்படியானால், உங்கள் சாமானை வாங்குவது நஷ்டகரமான வியாபாரம் என்று உங்கள் வாடிக்கைக்காரர் அறிய வேண்டும்போலிருக்கிறது.

* * *

நம் கண்ணுக்கெல்லாம் ஒன்றும் புலப்படாத ஒரு குப்பைக் காகிதத்தில்........... —(நிருபர் சரடு.)

இந்த நிருபருக்கு ஒரு இலவச யோசனை. தங்களுடைய இந்த ரகசியத்தைக் கண் வைத்தியரிடம் தெரிவிக்க வேண்டாம்; தெரிவித்தால், இழவு, ஏதாவது பணச்செலவு கிணச்செலவு நேரிட்டுவிடப் போகிறது!

* * *

பூரணச் சந்திரன் பிரகாசிக்கும் இரவில் மூன்று பேர் சந்திரனைப் பார்த்தார்கள். ஒருவர் ரஸிகர். ஒருவர் பாமரர், இன்னொருவர் கிரிடிக்.

—(ஓர் கட்டுரை.)

பூரண சந்திரனைப் பார்க்காமலேயே வருணிப்பார் ஒருவர். அந்த மற்றொருவர் பெயர் தான் 'பிருடா'. அவரைக் குறிக்க வேறு தனிச்சொல் இல்லையே. என் செய்வது?

நிஜமான "நவ உலகம்"

அங்கே உண்மையிலேயே வக்கீல்கள் இல்லையாம்; சாவகாரிகள் இல்லையாம்; மது வியாபாரிகள் இல்லையாம். அதிசயமாயிருக்கிறதல்லவா? இப்படியும் ஒரு உலகம் நடக்க முடியுமா என்று ஆச்சரியப்படுகிறீர்கள். இந்த உலகம் எங்கேயோ இல்லை. இந்தியாவில்தான், வங்காளத்தில், கல்கத்தாவுக்குத் தெற்கே 50-வது மைலில் உள்ள கோஸாபா என்ற பண்ணைதான் அவ்வுலகம். 20,000 ஏகர் நிலம் இருக்கிறது; 10 ஆயிரம் ஜனங்கள் அங்கு ஐக்கியமாய்த் தொழில் புரிகிறார்கள். ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிருஸ்தவர், ஹரிஜனங்கள் ஆகிய பலரும் கூட்டுறவு கொண்டு வாழ்கிறார்கள். இதை நிர்மாணம்செய்த பெருமை ஸர் டானியேல் ஹாமில்டன் என்பவருக்கு உரியது. பற்பல குடிசைத் தொழில்களும் விவசாயமும் இங்கு நடைபெறுகின்றன. பல பி. ஏ.க்கள் இதில் வேலை செய்கிறார்கள். இந்த விவரங்களைப் பாதிரி ஹாட்ஜ் என்பவர் ஒரு பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். இந்த நவ உலகத்தில், ரேடியோ உண்டா? மோட்டார் உண்டா? கிராமபோன் உண்டா? பட்டு உண்டா? ஆசனம் உண்டா? இவை இருப்பதாய்த் தெரியவில்லை. ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலானதோர் அரிய வஸ்து இருப்பதாய்த் தோன்றுகிறது. அதுதான் திருப்தி. திருப்தியும், களிப்பும், சமாதானமும் உள்ள இடத்திலேதானே, கோர்ட்டும், காசும், கள்ளும் கணிசமற்றுப் போக முடியும்?

வேலையின்றி வாளாயிருக்கும் படித்த வாலிபர்கட்கு அரியதொரு தருணம்.

—(விளம்பரம்.)

வாலிபர் வாளானால், அவரைப் பயிற்றிய ஸர்வ கலாசாலைகள் யுத்த தளவாடத் தொழிற்சாலைகளாகவே யிருக்க வேண்டும்.

* * *

முகத்தைக் கண்ணாடி போலாக்குவது நமது ரேஸர் பிளேடுதான்.

—(விளம்பரம்.)

இந்தப் பிளேடுகளை எல்லாரும் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டால், தெருவில் போகும்போது ஒருவர் அழகை ஒருவர் காட்டிக் கொண்டே நடப்பார்கள் என்றே தோன்றுகிறது.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

(மகாத்மா காந்தி எழுதியது)

கோவை அவிநாசிலிங்கமும், மதுரை சுப்பராமனும் மொழிபெயர்த்தது.

முதல் பாகம் (264 பக்கங்கள் கொண்டது) விலை ரூ. 1—0—0

மகாத்மா காந்தி முதன் முதல் சத்தியாக்கிரகத்தை நடத்தி வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் சரித்திரத்தை மகாத்மா தாமே எழுதியிருக்கிறார். இதில் பல உருக்கமான நிகழ்ச்சிகளும், உயர்ந்த தத்துவங்களும், தென்னாப்பிரிக்காவைப் பற்றிய பல விவரங்களும், அங்கு இந்தியர் நிலைமைகளும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த முதல் பாகத்தில், ஐரோப்பியரின் பலத்த எதிர்ப்புக்கிடையே மகாத்மாஜீ தென்னாப்பிரிக்காவுக்குள் பிரவேசித்து, பல ஆபத்துக்களுக்கும் ஆள்பட்டு, பெரிய தொரு சத்தியாக்கிரகப் போரை நடத்தி, சர்க்காருடன் முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது வரையிலுள்ள அரிய சரித்திரம் அடங்கியிருக்கிறது.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$.

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

தமிழ்நாடு ஹரிஜன சேவக சங்கம்

திருச்சிறுப்பள்ளி,
9—1—34.

மகாத்மாவின் தமிழ்நாட்டு சுற்றுப் பிரயாணம் வெற்றிகரமாகவும், மகாத்மாவுக்கு யாதொரு சிரமம் இல்லாமலும் நடைபெற, ஒவ்வொரு இடத்திலும் சுற்றுப் பிரயாண ஏற்பாடு செய்பவர்கள் அடியில் கண்ட விஷயங்களைக் கண்டிப்பாக சற்றும் மாறுபாடின்றி அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது.

1. நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் ஒரு நிமிடம்கூட மாறாமல் ஏற்பாடு செய்யவும்.

2. குறித்த இடத்தில் கூட்டங்களைக் கூட்டவேண்டும்.

3. காரிலேயே உபன்னியாசங்கள் போட்டிருக்கும் இடங்களில் தனியான பிரசங்க மேடை போடக்கூடாது. இதைக் கண்டிப்பாய் அனுசரிக்க வேண்டும்.

4. பிரசங்க மேடைகள் போட அனுமதித்திருக்கும் இடங்களில் தயாரித்து அனுப்பியிருக்கும் பிளான் மாதிரி ஏற்பாடு செய்யவேண்டும். வேறு எவ்விதமான ஏற்பாடுகளும் செய்யக்கூடாது. இது மகாத்மாவின் அபிப்பிராயப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

5. ஜனங்களை அமரிக்கையாய் உட்காரச் செய்யவேண்டும். ஜனங்கள் மகாத்மாவின்மேல் விழுந்து அவரைத் தொடவேண்டு மென்னும் ஆவலை அறவே நிவர்த்திக்க வேண்டும்.

6. இவ்வாபீஸ் 21 நெ. சுற்றறிக்கைப்படி சகல ஏற்பாடுகளும் செய்ய வேண்டும்.

தி. சே. சௌ. ராஜன்,
அக்கிராசனர்.

... Sangu Press, Triplicane, Madras